# திருக்குறள்

## நீதிக் கதைகள்

முதல் பாரத்திற்கும்
ஆருவது வகுப்பிற்குமுரியது



37 ந.பை.

ஒற்றுமை ஆபீஸ்
தியாகராயநகர் ...... சென்னை.

00551

APPROVED BY THE TEXT BOOK COMMITTEE
Vide C. List Page 119 Dated 22nd May 1951.

## திருக்குறள்

# நீதிக் கதைகள்

முதற் பகுதி

FORM I.

ஆறும் வகுப்பிற்குரியது

அரசியலார் வகுத்த புதிய பாடத் திட்டப்படி எழுதியது.

உலகத்தமிழ்க் கருத்தரங்கு நூலகம்
1313.
கூ. எண்
சென்னை

வித்வான்
ச. சேதுசுப்பிரமணியன்
சிதம்பரம்.

ஒற்றுமை நிலையம்,
8, வியாசராவ் தெரு,
தியாகராயநகர், மதராஸ்-17.

பதிப்புரிமை] [விலை அணு 6

4826
5 JUN 1975

# முன்னுரை

தமிழ் மொழிக்குத் தனிச் சிறப்பினை அளிப்பது திருக்குறள். அது, தமிழ் மறை எனவும் வழங்கப் பெறும். ஓதற்கு எளியது. உணர்வதற்கு அரியது. கருத்துக்களைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் தன்மை உள்ளது. அத்தகைய சிறந்த நூலைத் திருவள்ளுவர் என்ற பெரும் புலவர் பல ஆண்டுகளுக்கு முன்னமே நமக்காக இயற்றியுள்ளனர்.

அதனை எல்லோரும் கற்றறிதல் வேண்டும். ஆகையால் கல்வித்துறைத் தலைவர் அவர்கள் தமிழ் மாணவ மாணவியர் அனைவரும் கற்றற்கு எளிதான குறட் பாக்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள். அப்பாக்களின் கடின சந்திகளைப் பிரித்தும் எளிய நடையில் தெளிவான பதவுரை எழுதியும் கருத்தில் அமைவதற்கேற்ற கதைக் குறிப்போடு பதிப்பித்துள்ளேன். அவ்வப்பாக்களின் கருத்தும் கேள்வியும் எழுதப்பட்டுள்ளது. இப்பதிப்பு வெளிவரத் துணைபுரிந்த இறைவன் மேலும் இத்தகைய பணியில் எம்மை முயற்சி செய்ய அருள வேண்டும் என அவன் அடிகளை மேலும் மேலும் வாழ்த்தி வணங்குகிறேன்.

சிதம்பரம்
24—7—'48.

ச. சேதுசுப்பிரமணியன்

# திருக்குறள் நீதிக்கதைகள்

## முதற் பகுதி

### கடவுள் வாழ்த்து

முருகனும் கோபாலனும் தோட்டத்திற்குச் சென்றார்கள். செல்லும் வழியில் செடியைக் கண்டார்கள். கண்ட முருகன் "கோபாலா! செடி எப்படி உண்டாயிற்று?" என்று கேட்டான். கோபாலன் செடி விதையில் இருந்து உண்டாயிற்று என்றான். பின், முருகன் சொன்ன இரண்டில் முதலில் உண்டானது செடியா, அல்லது விதையா என்றான். அதற்குக் கோபாலன், "அது நமக்குத் தெரியாது. முதலில் இவை இரண்டில் ஒன்றை ஒருவர் நமக்காக உண்டாக்கி இருக்கிறார்" என்றான். அவர் யார் என்று முருகன் கேட்க, கோபாலன் "அவர்தான் கடவுள், அவர் பெயர் ஆதி பகவன், அவர் உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் உண்டாக்கினவர், நாம் கற்கும் எழுத்து எல்லாவற்றிற்கும் அகரம் எப்படி முதல் ஓசையாகக் கலந்து இருக்கிறதோ அதுபோல இவ்வுலகப் பொருள்கள் ஒவ்வொன்றிற்கும் ஆதிபகவன் முதன்மையாக விளங்குகிறார்" என்றான். இக் கருத்து மறவாமலிருக்கத் திருவள்ளுவர் நமக்காகச் செய்யுள் செய்திருக்கிறார் என்றான். "அதைச் சொல்" என்று முருகன் கோபாலனைக் கேட்கக் கோபாலன் சொன்னான்.

(1) அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

(பதவுரை) எழுத்து எல்லாம்-எழுத்துக்கள் யாவும், அகரம் - அகரமாகிய எழுத்தை, முதல் - முதன்மையாக உடையன, (அது போல) ஆதிபகவன்-முழுமுதற் கடவுளை, உலகு-உலகமானது, முதற்று முதன்மையாக உடையது.

(கருத்து) உலகமானது கடவுளை முதன்மையாக உடையது.

(கேள்வி) 1. உலகம் யாரை முதன்மையாக உடையது?

2. எதுபோல?

## அறன் வலியுறுத்தல்

(வலியுறுத்தல்-வற்புறுத்திக் கூறல்)

இருவர் தேங்காய்த் துண்டுகளை தின்று கொண்டிருந்தனர் அங்கு ஒரு நாய் ஓடி வந்தது. ஒருவன் நாய்க்குச் சிறிது தர்மமாகப் போட்டான். மற்றவன் போடவில்லை, போடாதவனை நாய் கடித்தது. அப்போது அவன் தர்மம் செய்வதை விட மேலானது இல்லை, நாம் தர்மம் செய்யாமையால் இத் தீங்கை அடைந்தோம் என்று தர்மம் செய்யலானான்.

(2) அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை ; அதனை
மறத்தலின் ஊங்கு இல்லை கேடு.

(பதவுரை) அறத்தின்-(ஒருவனுக்குத்) தருமம் செய்தலைக் காட்டிலும், ஊங்கு-மேற்பட்ட, ஆக்கமும்-செல்வமும், இல்லை-கிடையாது, அதனை-அத்தருமத்தை, மறத்தலின்-(அறியாமையால்) மறந்து விடுதலைக் காட்டிலும். ஊங்கு-மேற்பட்ட, கேடு-துன்பமும், இல்லை-கிடையாது,

(கருத்து) தருமம் செய்தவர் பெருமையையும் அது செய்யாதவர் துன்பத்தையும் அடைவர்.

(கேள்வி) ஒருவனுக்கு மேலான ஆக்கம் எது? எதை மறந்தால் கேடு உண்டாகும்? ஊங்கு, ஆக்கம்; பொருள் சொல்லுக.

(இலக்கணம்) ஊஉங்கு உயிரளபெடை.

## புதல்வரைப் பெறுதல்

பாரதத் தாயின் புதல்வரான ராசகோபாலாச்சாரியார் இப்பொழுது பெரிய பதவியில் அமர்ந்திருக்கிறார்கள். இதைக் கேட்டயாவரும் இவ்விதப் பதவி வகிக்கும் அறிவும் ஒழுக்கமும் உள்ள இவரைப் பெறுவதற்கு இவர் தந்தை என்ன தவம் செய்தாரோ என்றுவியந்து சொல்வதை நாம் யாவரும் கேட்கிறோம். இவ்விதம் நடப்பவர்களையே திருவள்ளுவரும் தம் தந்தைக்குச் செய்ய வேண்டிய உதவியைச்செய்தவர்கள் என்று சொன்னார்.

(3) மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்னோற்றான் கொல் எனும் சொல்.

(பதவுரை) தந்தைக்கு - தகப்பனுக்கு, மகன் - பிள்ளையானவன், ஆற்றும் - செய்யும், உதவி - உபகாரம் (யாதெனின்), இவன் தந்தை- இவன் தகப்பனானவன், என்னோற்றான் கொல் - (நல்லறிவு நல்லொழுக்கமும் உடைய இவனைப் பெறுவதற்கு) என்ன தவம் செய்தானோ, எனும் சொல் — என்று வியந்து சொல்கின்ற சொல்லை (உண்டாக்குதலாம்).

(கருத்து) மகன் தன் தந்தையைப் பிறர் புகழும்படி நடக்க வேண்டும்.

(கேள்வி) மகன் தந்தைக்குச் செய்யவேண்டிய உதவி எது?

நோற்றான் - பொருள் சொல்லுக.

## அன்புடைமை

மகாத்மா காந்தி தங்கி வாழ்ந்த சேவாக்கிரமத்தையும் அவரையும் காண ஓர் அன்பர்தம் குடும்பத்துடன் வந்தார்.

வந்தவரைக் காந்தி உபசரித்து அவர்கள் உணவிற்கு வேண்டிய பொருள்களையும் கொடுத்து தனி மாளிகையில் இருக்கச் செய்தார். ஒரு நாள் வந்த அன்பர் "பாத்திரங் களை விளக்க ஓர் வேலை ஆள் வேண்டும்" என்றார். காந்தி "இரவு சாப்பிட்ட உடன் பாத்திரங்களை மாளிகைக்கு வெளியே வையுங்கள், விடிவதற்குள் விளக்கித்தரச் செய்கிறேன்" என்றார் இப்படிச் சில நாள் செல்ல ஒரு நாள் அன்பர் தோட்டத்திற்கு வர அப்போது காந்திமகான் உட்கார்ந்து பாத்திரங்கள் துலக்குவதைக் கண்டார். அப் போது "பொருள் தருவதின்றி உடம்பாலும் உதவி செய்த தாங்களே அன்பின் உரு" என்று அவர் காலை வணங்கி இனி நான் என் பொருளாலும் உடம்பாலும் பிறர்க்கு உதவி செய்வேன் என்று உறுதி கொண்டார்.

(4) அன்பிலார் எல்லாம் தமக்குரியர் ; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

*(பதவுரை) அன்பு இலார் - (உயிர்களிடத்தில்) அன்பு இல்லாதவர்கள், எல்லாம் - (பிறர்க்குப்பயன் படாமையால்) எல்லாப் பொருள்களையும், தமக்கு - தங்களுக்கே சொந்த மாக, உரியர் - கொள்வார்கள், அன்புடையார் - அன்பை உடையவர்கள், என்பும்-(பொருளால் அல்லாமல்) தங்கள் உடம்பையும், பிறர்க்கு - அயலார்க்கு, உரியர் - (உதவிசெய் வதற்கு) உடையர்.*

*(கருத்து) அன்புள்ளவர் தம் செல்வத்தால் அன்றி உடம்பாலும் உதவி செய்வார்.*

*(கேள்வி) 1. அன்பிலாரது செயல் யாது ?*
*2. பிறர்க்குத் தம் உடம்பையும் உதவுபவர் [எவர்?*

## விருந்தோம்பல்

*(ஓம்பல் - பாதுகாத்தல்)*

திருவாவடுதுறை ஆதீன வித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்பவர் தஞ்சாவூரிலுள்ள தம் அன்பரைக்

காணத் திருவாவடுதுறையிலிருந்து புறப்பட்டு வண்டியில் வரும் பொழுது இடையில் மழை வந்தது. காலம் இரவு 12 மணி. அருகேயிருந்த ஒரு திண்ணையுள்ள வீட்டில் போய்வித்துவான் அவருடன் கூடவந்த மூவரும் தங்கினர்கள். இம்மூவரில் ஒருவர் "மேலும் சிறிது நேரம் மழை வராதிருந்தால், அருகிலுள்ள ஊருக்குச் சென்று உணவு அருந்தலாம், இடையில் தங்கினோமே, பசியே அறியாத தாங்கள் பசியுடன் இருப்பது எங்களுக்கு வருத்தமாக இருக்கிறது" என்றார். அச்சொல்லை உள்ளிருந்து கேட்டுக் கொண்டிருந்த அன்பர் தம் மனைவியை எழுப்பி "வெளியில் இருப்பவர்கள் பசியோடிருக்கிறார்கள் அவர்கள் நால்வருக்கும் உணவு தயார் செய்" என்று சொல்லித் தாமும் கூடச் சென்று அடுப்பு மூட்டிப் பாதி சமையல் ஆனவுடன் வெளியே வந்து அவர்களைச் சாப்பிட அழைத்தார். அப்போது வித்துவான் மழை நின்றதும் சிறிது தொலைவிலுள்ள ஊருக்குச் சென்று சாப்பிடுகிறோம் உங்களுக்குச் சிரமம் வேண்டாம்" என்றார். அது சமயம் அன்பர் 'எனக்கு என் மனைவியை அளிக்கும் பொழுது என் மாமனார் 'இப் பெண்ணை உனக்கு விவாகம் செய்து கொடுப்பது உன் வீட்டிற்கு வரும் அன்பர்களுக்கு உணவு அளித்துக் காப்பாற்றுதற்கே ஆகும்' என்றார். அவர் சொற்படி நடப்பதே என் கடமை. ஆகையால் சாப்பிட்ட பின் செல்லலாம் என்றார். அப்போது வித்வான் "வள்ளுவரும் இதை மிக அழகாகச் சொன்னார்" என்று வந்தவர்க்குச் சொன்னார்.

(5) இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம்; விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு.

(பதவுரை) இல் இருந்து - (மனைவியோடும் காட்டிற் செல்லாது) வீட்டின் கண் இருந்து ஓம்பி-(பொருள்களைப் பாதுகாத்து, வாழ்வது எல்லாம் - வாழும் வாழ்க்கை எல்லாம், விருந்து-தம் வீட்டிற்கு வந்த விருந்தினரை ஓம்பி,

உபசரித்து, வேளாண்மை - (அவர்க்கு வேண்டிய) உதவி களை, செய்தற் பொருட்டு-செய்தலின் காரணத்திற்கே (ஆகும்).

(கருத்து) வந்த விருந்தினருக்கு உதவி செய்தலே இல் வாழ்க்கையின் பயன்.

(கேள்வி) 1. இல்வாழ்க்கையின் பயன் என்ன?
2. துறவறத்தைவிட இல்லறமே மேலானது எப்படி?

வேளாண்மை, ஓம்பல்; பொருள் சொல்லுக.

## விருந்தோம்பல்

(ஓம்பல்-உபசரித்தல்)

அதியமான் என்பவன் கடை ஏழுவள்ளல்களில் ஒருவன். அவனைக் காணச்சென்ற ஔவை அவன் மாளிகையில் விருந்தினளாய்த் தங்கி இருந்தாள். அது சமயம், உண்டால் நெடுநாள் உயிரோடு வாழக் கூடியதும், அமிர்தத்தைக் காட்டிலும் மிக இனிப்புள்ளதும் ஆன ஒரு நெல்லிக்கனி அவனுக்குக் கிடைத்ததை தன் விருந்தினளாகிய ஔவை உண்ணாமல் தான் உண்பது தவறு என நினைத்து அவரை அழைத்து அக்கனியை உண்ணச் செய்து பின் அதன் பெருமையைப் பற்றிச் சொன்னான். அக்கனியை உண்ட ஔவை அமிர்தத்திலும் மேலான இக்கனியைத் தான் உண்ணவிரும்பாமல் ஏழை உண்ண அளித்த பெருமையையே எல்லா உலகும் பேசுக என்று வாழ்த்தினாள். வள்ளுவரும் இக்கருத்தையே வற்புறுத்திக் குறள் செய்தார்.

(6) **விருந்து புறத்ததாத் தான் உண்டல் சாவா**
**மருந்து எனினும் வேண்டற்பாற்று அன்று.**

(பதவுரை) விருந்து-(தன்னைக் காணவந்த) புதியவர், புறத்தது ஆக-(தன் வீட்டின்) வெளியிலிருக்க, தான் உண்டல்-தான் மட்டும் சாப்பிடுதல், சாவா மருந்து எனினும் - அமிர்தமாயினும், வேண்டற்பாற்று - விரும்பும் முறையை உடையது, அன்று-அன்று.

(கருத்து) அமிர்தமானாலும் அதை விருந்தினர்களுக்கு அளித்துத் தானும் உண்ணவேண்டும்.

(கேள்வி) 1. விரும்பப்படாத உணவு எது?

2. தான் உண்பது அமிர்தமாயினும் அதை எவ்வாறு உண்ணவேண்டும்?

## இனியவை கூறல்

(இனியவை - அன்பு மொழி)

வறுமையுற்ற பெருஞ் சித்திரனார் என்பவர் தம் வறுமையை நீக்கிக்கொள்ள அரசனிடம் சென்றார். இவர் வந்ததைக் காவலன் மூலம் அறிந்த அரசர் காவலாளனிடம் பொருள் கொடுத்துப் புலவரிடம் கொடுக்கச் சொன்னார். அதைக் கொடுக்கவந்த காவலனிடம் 'புலவர் முகம் விரும்பிப் பார்த்து மனமகிழ்ச்சியுடன் அன்பு மொழி பேசாமல் பொருள் மட்டும் தருவது அறமாகாது ஆகை யால் அப்பொருளை அரசரிடமே கொடுத்துவிடு' என்று சொல்லிப் போனார். இதனால் பொருள் தருவதைக் காட்டிலும், முகம் விரும்பிப் பார்த்து மனம் உவந்து இனிய மொழியுடன் தருவதே மேலானது.

(7) முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்
இன் சொலினதே அறம்.

(பதவுரை) முகத்தான் - முகத்தினால், அமர்ந்து — விரும்பி, இனிது நோக்கி-அன்பாகப் பார்த்து, அகத்தான் ஆம்-மனத்தோடு பொருந்திய, இன்சொலினதே-அன்பு மொழிகளைச் சொல்லுதலின் இடத்தே, அறம்-தருமம் (உள்ளது.)

(கருத்து) அன்பு மொழிகளைப் பேசுதலே சிறந்த தர்மம்.

(கேள்வி) 1. எவ்வாறு பேசுவது அறமாகும்?

2. அறம் எங்குள்ளது?

## செய்ந்நன்றி அறிதல்

குந்திதேவியின் புதல்வன் கர்ணன் என்பது நெடு நாள் வெளிப்படாமல் இருந்தது. முடிவில் கண்ணன் விவரம் சொல்லிக் குந்திதேவியைக் கர்ணனிடம் அனுப்பி னன். சென்ற தாய் தன் மகனிடம் "பஞ்சபாண்டவர்கள் ஐவரும் உன் தம்பிகள். அவர்களோடு நீ சண்டை செய்தல் நீதியல்ல. வா, அவர்களோடு சேர்" என்று அழைத்தாள். அதற்குக் கர்ணன், "இத்தனைநாள் எனக்கு உதவி செய்த நண்பனை மறத்தல் கூடாது. ஆதலின் அவர் களோடு சேர்ந்து வாழவேண்டும் என நினைப்பதை இப் போதே மறந்து விடு" என்று தன் தாய்க்கு நன்றி அறிதலைத் தெளிவுறச் சொன்னன்.

(8) நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

(பதவுரை) நன்றி-பிறர் செய்த உதவியை, மறப்பது-மறந்து விடுவது, நன்று-தருமம், அன்று-அல்ல, நன்று அன்று-(பிறர் செய்த) உதவி அல்லாத தீமையை, அன்றே - (செய்த) அப்பொழுதே, மறப்பது - மறந்து விடுவது, நன்று-தருமம் ஆகும்.

(கருத்து) பிறர் செய்த உதவியை மறத்தல் கூடாது.

(கேள்வி) எதை மறத்தலும் எதை நினைத்தலும் வேண்டும்?

## நடுவு நிலைமை

உப்பு வியாபாரம் செய்யும் ஒருவரது புதல்வர் படி முதலிய அளக்கும் பொருள்களுக்கு முத்திரை போடும்

அதிகாரியாக இருந்தார். தன் மகன் அதிகாரியாக இருப்ப தால் தன் படியைக் குறைவுள்ளதாக வைத்து அளந்து வந்தார். பரிசோதனை செய்யும் தன் மகன் தன் தந்தை வைத்து அளக்கும் குறைந்த படியைக் கண்டு "தந்தையே! நமக்கு ஒரு நீதி பிறர்க்கு ஒரு நீதியா? தாங்கள் செய்தது தவறு. இனி இப்படிச் செய்யாதீர்கள். இப்போது செய்த குற்றத்திற்காக இந்தப் பத்து ரூபாயை அபராதமாகக் கட்டுங்கள்" என்று தன் கையிலிருந்த ரூபாயைக் கொடுத்துத் தன் தந்தையையும் நீதிவழியில் நடக்குமாறு செய்தான். இப்படிப்பட்டவரையே திரு வள்ளுவர் சான்றோர் என்றும் இவ்விதச் செயலையே அழகான செயல் என்றும் கூறினர்.

(9) சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து
கோடாமை சான்றோர்க்கு அணி. [ஒருபால்

*(பதவுரை) சமன் செய்து-(முன்பு தராசு) சமமாக இருந்து, சீர்தூக்கும்-(பின் தன்னிடம் வைத்த பாரத்தை) எடை காட்டும், கோல் போல்-தராசுபோல், அமைந்து-ஒழுக்கங்கள் பொருந்தி, ஒருபால்-ஒரு பக்கத்தில், கோடாமை - மாறுபடாமை, சான்றோர்க்கு - மேலோர்க்கு, அணி-அழகு(ஆகும்).*

*(கருத்து) பாரபக்ஷம் இன்றி நடப்பதே மேலோர்க்கு அழகு.*

*(கேள்வி) 1. சான்றோர்க்கு அழகாவது எது?*
*2. சமன் செய்து சீர்தூக்கும் கோல். இதற்குப் பொருள் எழுது.*

## அடக்க முடைமை

குலசேகரர் என்றஅரசர் ஒருவர் இருந்தார். அவர் திருமாலிடம் அன்புபூண்டவர். பாகவதர்களை எப்போதும் தம் பக்கத்திலேயே வைத்துப் பாதுகாத்து வந்தார். இதனால் அரசியல் நடவடிக்கைகள் நடக்கவில்லை. இதைக்

கண்ட அமைச்சர் அரசர் பாகவதர்களை விலக்க அவர்கள் மீது பழி சுமத்த வேண்டும் என்று பெட்டியில் இருந்த மாணிக்கத்தைத் தான் எடுத்துக் கொண்டு அரசரிடம் சென்று, "அரசே! நம் பெட்டியிலிருந்த மாணிக்கத்தைப் பாகவதர்கள் எடுத்துக் கொண்டார்கள்" என்றார். இதைக் கேட்ட அரசரும் பாகவதரும் அடக்கமே குணமாக உள்ளவர் ஆதலினால் பேசாதிருந்தனர். அடங்காமைக் குணமுள்ள அமைச்சர் மேலும் பாகவதரைத் துன்புறுத்த ஆரம்பித்தபோது அரசர் கண்டு பாகவதர் எடுக்கவில்லை என்று நான் பாம்பிருக்கும் இக்குடத்தில் தன் கையை விடுகிறேன் என்று பாம்பிருந்த குடத்தில் தன் கையை விட்டார். பாம்பு கடிக்காததைக் கண்டு அநேகர் ஆச்சரியமுற்றனர். அமைச்சர் கண்டு திகைத்து நானே எடுத்தேன் என்று மாணிக்கத்தைக் கொண்டு வந்து வைத்தார். பார்த்த அனைவரும் அரசரது அடக்கத்தைக் கண்டு அவரைத் தெய்வமாகப் புகழ்ந்தார்கள். அமைச்சர் அடங்காமையைக் கண்டு அவரை மிகவும் அவமானமாகப் பேசி இகழ்ந்தார்கள். இதனால், அடக்கமே தெய்வ நிலையைத் தரும். அடங்காமை பிறர் இழித்துப் பேசும் தாழ்ந்த நிலையைத் தரும்.

(10) அடக்கம் அமரருள் உய்க்கும்;
அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்.

*(பதவுரை) அடக்கம்-பணிவாகிய ஒழுக்கம் (ஒருவனை) அமரருள்-(பின்) தேவர் உலகத்து, உய்க்கும்-கொண்டு சேர்க்கும், அடங்காமை - பணியாமையாகிய தீமை (ஒருவனை), ஆர் இருள்-தங்குதற்கரிய (இருட்டில்)இழிவில், உய்த்துவிடும்-கொண்டு சேர்க்கும்.*

*(கருத்து) பணிவுடையார் தேவர் உலகை அடைவர்.*

*(கேள்வி) 1. அடக்கமுடையார் அடையும் பயன் என்ன?*

*2. ஆரிருளில் உய்ப்பது எது?*

## ஒழுக்கமுடைமை

யமன் பருந்தாகவும் இந்திரன் புருவாகவும் வடிவு கொண்டு, பூவுலகை ஆளும் சிபிச் சக்கரவர்த்தியைச் சோதிக்க எண்ணங்கொண்டு யமனாகிய பருந்து துரத்தி வர இந்திரனாகிய புரு சிபியின் காலில் காக்கவேண்டும் என்று கூறி விழுந்தது. அப்போது சிபியும் காப்பதாக அதைக் கையால் எடுத்துத் தடவிக் கொண்டிருந்தார். அச்சமயம் பருந்து "என் ஆகாரத்திற்காகத் துரத்தி வந்த புருவை விடும் என்று சிபியினிடம் சொன்னது. அவர் "காப்பேன் என்று சொன்ன ஒழுக்கத்திலிருந்து நான் தவறமாட்டேன். வேண்டுமென்றால் உன் ஆகாரத்திற்காக என் உடம்பில் உள்ள தசையைத் தருகிறேன்" என்று புருவை ஒரு தட்டில் வைத்து மற்றொரு தட்டில் தன் தசையை அறுத்துவைத்துச் சமம் ஆகாமையால் பின் தானும் ஏறிப் புருவைக் காத்தார். இதனால் உயிரைக் கொடுத்தாவது ஒழுக்கத்தைக் காப்பாற்றின சிபி மேன்மையை அடைந்தார். இதையே திருவள்ளுவரும் விளக்கமாகக் கூறினார்.

**(11) ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப்படும்.**

*(பதவுரை) ஒழுக்கம்-நன்னடத்தை, விழுப்பம்-(யாவருக்கும்) மேன்மையை, தரலான்-கொடுத்தலால், ஒழுக்கம்-அந் நன்னடத்தையை, உயிரினும்-தம் பிராணனைக் காட்டிலும் (விழிப்பாக), ஓம்பப்படும்-பாதுகாக்க வேண்டும்.*

*(கருத்து) மக்களுக்குச் சிறப்பைத் தருவது நன்னடத்தையே.*

(கேள்வி) உயிரினும் ஓம்பப்படுவது எது?
விழுப்பம் ஓம்பப்படும்; பொருள் சொல்லுக.

## பொறையுடைமை

ஏசுநாதர் தம் நாட்டு மக்களுக்கு வெளிச்சட்டையைத் திருடியவனுக்கு உள்சட்டையைக்கொடு என்றும் ஒரு கன்னத்தில் அறைந்தவர்க்கு மற்றொரு கன்னத்தைக் காட்டு'' என்றும், உபதேசித்தார். இம்மொழிகளைக் கேட்ட பலர் "இவர் இப்படிச் செய்வாரா'' என்றும், துரோகி பாவி என்றும், பலவாறு வைது அவரைத் துன்புறுத்தினர்கள். அவற்றைக்கேட்ட அவர் "பரமபிதாவே! இவர்கள் என்னை இகழ்ந்து பேசுவதற்காக நீ அவர்களிடம் வெறுப்புக் கொள்ளாதே'' என்று வணங்கிக் கொண்டேயிருந்தார். அதனுல் இன்று இவர் பெரிய மகானுக விளங்குகிறுர். இதை வள்ளுவரும் நம்மைத் தாங்கும் நிலமகள் நாம் தோண்டும்போது எவ்வாறு பொறுக்கிருளோ அதுபோல நம்மைப் பிறர் அவமதித்துப் பேசும்போது நாம் பொறுமையுடன் இருத்தல் வேண்டும் என்றுர்.

(12) அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

*(பதவுரை) அகழ்வாரை-தன்னைத் தோண்டுபவரை, தாங்கும்-கீழே விழாமல் சுமக்கும், நிலம் போல-பூமியைப் போல், தம்மை - தங்களை, இகழ்வார் - அவமதிப்போரை, பொறுத்தல் - (இகழாமல்) சகித்துக்கொள்ளல், தலை - முதன்மையான தருமம்.*

*(கருத்து) பிறர் சொல்லும் அவமதிப்பைப் பொறுத்தல் வேண்டும்.*

*(கேள்வி) 1. எது தலையாய தருமம்?*
*2. தம்மை இகழ்பவரை எதைப்போல் பொறுத்தல் வேண்டும்?*

## அழுக்காறுமை

(பொறுமைப்படாமை)

சேர அரசனிடம் இருந்த புலவர்கள், அச்சேரன் கம்ப ரிடம் பெருமதிப்பு வைத்திருந்ததைக் கண்டு பொறுமை கொண்டார்கள். அதனுல் தங்களுக்குத் தொழில் செய்யும் அம்பட்டனை அழைத்து "கம்பரை உன் சகோதரன் என்று சொல் நாங்கள் பார்த்துக் கொள்கிறேம்" என்றுர்கள். அம்பட்டன் அவ்விதமே செய்ய, யாவரும் கலங்கினுர்கள். பிறகு அரசர் அம்பட்டனை உதைத்துக் கேட்க அவன் உண்மையைச் சொல்லிவிட்டான். அப்போது புலவர் வெட்கித் தலைகுனிந்து நின்றனர். இவ்விதமாகத் தாழ்வை உண்டாக்கும் பொறுமை இல்லாத தன்மையை ஒருவன் ஒழுக்க வழியாகக் கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் சொன்னுர்.

(13) ஒழுக்காறுக் கொள்க ஒருவன் தன் நெஞ்சத்(து)
அழுக்காறு இலாத இயல்பு.

*(பதவுரை)* ஒருவன்-ஒருவன், தன் நெஞ்சத்து-தன் மனத்தின்கண்ணே, அழுக்காறு - பொறுமை என்னும் குற்றம், இலாத இயல்பு-இல்லாத அறிவோடு கூடிய தன்மையை, ஒழுக்கு ஆறு ஆக-தனக்குச்சொல்லிய நன் னடத்தை வழியாக, கொள்க-எண்ணுக.

*(கருத்து)* பொறுமைப் படுதல் கூடாது.

(கேள்வி) 1. ஒருவன் எதை ஒழுக்க வழியாகக் கொள்ளல் வேண்டும்?

2. அழுக்காறுமை, இயல்பு; பொருள் சொல்லுக.

## புறங் கூறுமை

சண்முகம் பிள்ளை என்பவர் தஞ்சாவூர்ப் பக்கங்களில் பாரதம் படித்துப் பலருடைய அன்பைப் பெற்றிருந்தார்.

இவர் இலக்கணம் கற்க விரும்பித் திருவாவடுதுறை வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் வந்து பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று வேண்டினார். அவர் சோதனை செய்து நன்னூல் யாரிடமாவது கற்று அதன்பின் வந்தால் படிக்கலாம் என்றார். இதைக் கேட்ட அவர் அங்குப் படித்துவரும் மாணவரிடம் "ஐயா! இவர் எங்கே படித்தார்? எப்படிப் படித்தார்?" என்று கேட்டார். அம்மாணவரில் முதல்வராய் இருந்த சுப்பிரமணிய தேசிகர் "ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கிறீர் எங்கள் குருவை வெளியேபோய் வையவா கேட்கிறீர்? அதை விட உம்மிடம் கீழ்ப்படியாமைக் குற்றம் உள்ளது அதை நீக்கிக் கொள்ள முயற்சி செய்யும். குரு சொன்னபடி நீர் படித்து வாரும், போம்" என்று சொல்லி அனுப்பினார். இதைக் கேட்ட அவரும் நம் குற்றத்தை உணராமல் அவர் குற்றத்தை அறியத் தொடங்கியது தவறு என்று எண்ணிப் பின் நன்னூல் கற்று, பிள்ளை அவர்களிடமே வந்து மீண்டும் படித்தார்.

(14) ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற் பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

*(பதவுரை) ஏதிலார்-அயலாரிடம், குற்றம்போல்-(புறங் கூறுவார் புறங் கூறுவதற்கு அவர்) குற்றம் ஆராய்வது போல, தம் குற்றம்-புறங் கூறலாகிய தம் தவறையும், காண்கிற்பின்-ஆராயவல்லவரானால் மன்னும் உயிர்க்கு-நிலை பெற்ற உயிர்க்கு, தீது உண்டோ-வரும் துன்பம் உளதோ (இல்லை.)*

*(கருத்து) தம் குற்றத்தை ஆராய்பவர் புறங் கூறார்.*

*(கேள்வி) 1. எத்தன்மை உடையவர் புறங் கூறார்?*

*2. மன்னும் உயிர், காண்கிற்பின், பொருள் சொல்லுக.*

## தீவினை அச்சம்

ஆற்றங்கரை வழியே சென்ற துறவி அங்கு மீன் பிடிக்கும் வலைஞனைப் பார்த்து "அப்பா! எப்போது கரை யேறுவாய்" என்றார். அவன் "சுவாமி, இந்தப் பெட்டி நிரம்பினால் கரையேறுவேன்" என்றான். பின் "தாங்கள் அங்கும் இங்கும் அலைந்து வாடுவதைவிடத் தாங்களும் இவ்விதம் செய்தால் பெரிய பணக்காரர் ஆகலாம்" என்றான். அதற்குத் துறவி "நெருப்பு நெருங்கினவரை மட்டும் சுடும். இக்கொலைத் துன்பமோ பின்வரும் பிறவியிலும் அந்த உடம்பிலும் அங்கும் வந்து துன்பம் செய்யும். ஆதலால் நான் இத்தொழில் செய்ய வரமாட்டேன்" என்று ஓடிவிட்டார். பின் வலைஞனும் அத்தீய தொழிலை விட்டு அத்துறவியின் சொற்படி நல்வழியில் நடக்கலானான்.

(15) தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்படும்.

*(பதவுரை) தீயவை-(தனக்கு இன்பம் வரும் என்று நினைத்துச் செய்யும்) கொடிய தொழில்கள், தீய-பின் இன்பம் இல்லாமல் துன்பங்களை, பயத்தலால்-உண்டாக்கு வதால், தீயவை-அத்தன்மையான தீய செயல்கள், தீயினும்-நெருப்பைவிட அதிகமாக, அஞ்சப்படும்-பயப் படத்தக்கவை.*

*(கருத்து) பிற உயிர்க்குத் துன்பம் தரும் செயலைச் செய்தல் ஆகாது.*

*(கேள்வி) தீயினும் அஞ்சப்படுவது எது?*

## ஒப்புரவறிதல்

(ஒப்புரவு - உலக நடை)

மழை பெய்யும்பொழுது கண்ணன் சென்று "யாகம் நடத்த விறகு வேண்டும்" என்று துரியோதனனைக்

கேட்டான். அவன் "அரண்மனைக்கே விறகில்லை, போ" என்று துரத்திவிட்டான். பின் கர்ணனிடம் போய் யாசிக்க, அவன் தன் மாளிகையில் ஒன்றை இடித்து அதிலுள்ள மரங்களைக் கொடுத்தான். அப்போது கண்ணன் "உலக நடை அறிந்து உதவும் அறிவுள்ள உங்களிடம் உள்ள செல்வம் ஊர் அருகே உள்ள நீர் நிறைந்த குளத்தைப்போல் பயனுள்ளது" என்றான்.

**(16) ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.**

(பதவுரை) *உலகு-உலக நடையை, அவாம்-விரும்பிச் செய்யும், பேரறிவாளன்-மேலான அறிவை யுடையவனது. திரு-செல்வம், ஊருணி-ஊரில் வாழ்வார் தண்ணீர் உண்ணும் குளம், நீர்-தண்ணீர், நிறைந்தற்று-நிறைந்த தற்குச் சமமாகும்.*

(கருத்து) *எல்லார்க்கும் கொடுத்து வாழ்பவன் செல்வமே மேலான செல்வம்.*

(கேள்வி) *1. பேரறிவாளன் செல்வம் எதற்கு ஒப்பாகும்?*

*2. ஊருணி நீர் நிறைந்ததற்கு ஒப்பான செல்வம் உள்ளவர் எவர்?*

## ஈகை

திருவாரூரில் சபாபதி முதலியார் என்று ஒருவர் இருந்தார். அவர் அவ்வூரில் உள்ள மக்கள் யார் எதைக் கேட்டாலும் கொடுத்துக்கொடுத்து ஏழை ஆனார். தம் வயிறு வளர்க்கவே துன்பப்பட்டுத் தினந்தோறும் நெசவுத் தொழில் செய்து அதனால் வரும் சம்பளத்தைக் கொண்டு காலங்கழித்து வந்தார். அப்படி வரும் நாளில் ஒருநாள் வழியின் இடையில் ஒரு வயோதிகர் வந்து "பசியாய் இருக்கிறது" என்றார். இதைக் கேட்ட முதலியார் அன்றைய கூலியை அப்படியே கொடுத்து விட்டார்.

இதைக்கண்ட அருகிருந்தவர், "ஐயா! இன்னும் இப் பைத்தியம் போகவில்லையா? கொடுத்ததால் இம்மைப் பயனும் இல்லாமல் போனீர். மறுமைப்பயன்தான் ஏது? போகட்டும். நீர் தந்த பொருளால் செல்வமுடையவன் ஆனேன். நான் தரும் ஆயிரம் ரூபாயும் பெற்றுக் கொள்ளும்" என்றார். முதலியார் "ஐயா! எனக்கு இம்மைப் பயனும் மறுமைப்பயனும் கிடைக்கும் என்றாலும் நான் வாங்கமாட்டேன். இவை இரண்டும் இல்லை என்றாலும் கொடுத்துக்கொண்டே இருப்பேன்" என்றார். பின் அருகிருந்தவர் தாமும் தருமம் செய்யத் தொடங்கினர்.

(17) நல்லாறு எனினும் கொளல்தீது ; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

*(பதவுரை) கொளல்-யாசித்தல், நல்லாறு-மோக்ஷ உலகிற்கு நல்ல வழி, எனினும்-என்பவர் இருப்பாராயினும், தீது-(யாசித்தல்) குற்றமானதாகும், மேல் உலகம்-கொடுத்தவர்க்கு மோக்ஷ உலகம், இல் எனினும்-இல்லை என்பவர் இருப்பாரானாலும், ஈதலே-கொடுத்தல், நன்று - நல்லது ஆகும்.*

*(கருத்து) பின் பயனில்லை என்றாலும் கொடுத்தலே நல்லது.*

(கேள்வி) *ஈதல், யாசித்தல், இவற்றில் சிறந்தது எது? எப்படி?*

## புகழ்

ஒரு செல்வனுக்கு இரண்டு குமாரர்கள்இருந்தார்கள். அவன் அவர்களின் திறமையைச் சோதிக்க எண்ணி, ஒவ்வொருவருக்கும் பத்துப் பத்து ரூபாயும் ஒவ்வொரு வீட்டையும் கொடுத்து, இவ்வீட்டை இப்பணத்தைக் கொண்டு நீங்கள் இருவரும் தனித்தனியாக நிறையச் செய்ய வேண்டும் என்று சொன்னான்.மூத்தவன் உடனே

பத்து ரூபாய்க்கும் வைக்கோலை வாங்கி வீட்டை நிறைத்து அடைத்து விட்டான்.

இளையவன் ஒரு ராமர் படமும் மலர் மாலையும் தீபமும் எண்ணெயும் தன் பத்து ரூபாய்க்கு வாங்கி, வீடு முழுதும் தீப அலங்காரமும் மலர் அலங்காரமும் செய்து ராமர் படத்தை வைத்து, ராமாயணப் பிரசங்கமும் செய்ய ஏற்பாடு செய்தான். வீடு முழுதும் விளக்கு எரிவதைக் கண்ட யாவரும் அவ்வீட்டைப் பார்க்கத் திரளாக வந்து பிரசங்கத்தைக் கேட்டனர். பிரசங்கம் முடிந்ததும் வந்தவர்களிடம் செல்வன் நடந்ததைச் சொல்ல, அவர்கள் ' இளையவனைப் போன்ற பிள்ளையை யல்லவா பெற வேண்டும். மூத்தவனைப் பெற்றதைவிடப் பெறாமல் இருக்கலாம் '' என்று சொல்லிச் சென்றனர்.

**(18) தோன்றிற் புகழொடு தோன்றுக, அஃதிலார்**
**தோன்றலில் தோன்றாமை நன்று.**

(பதவுரை) தோன்றின்-(மக்களாய்ப்) பிறக்கின், புகழொடு-புகழுக்கேதுவாகிய குணத்தோடு, தோன்றுக-பிறக்க, அஃது இலார்-அக்குணமில்லாதார், தோன்றலில்-பிறத்தலைக் காட்டிலும், தோன்றாமை - (மக்களாய்ப் பிறவாமல்) விலங்காய்ப் பிறத்தல், நன்று-நல்லது.

(கருத்து) புகழுடன் வாழும் மக்களே சிறந்தவர்.

(கேள்வி) எவர் தோன்றலைக் காட்டிலும் தோன்றாமை நன்று?

## வாய்மை

நாகப்பட்டினத்தில் ஒரு செல்வர் இருந்தார். அவர் மாளிகையில் கணக்கு எழுதும் வேலைக்கு ஓர் ஆள் தேவை இருந்தது. அதற்குப் பலர் பல கனவான்களுடைய சிபாரிசுக் கடிதத்துடன் வந்து தங்கள் தொழில் திறமையைப் பற்றிப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தார்

கள். அப்போது உடல் அழுக்கு நீங்கக் குளித்துத் தூய்மையான ஆடை உடுத்துக் கொண்டுள்ள ஒருவர் போகும்பொழுதே வழியில் கிடந்த பேனுவையும் கணக்குப் புத்தகத்தையும் எடுத்து மேஜைமேல் வைத்துவிட்டு அச் செல்வரிடம் சென்றார். இவர் செய்து வந்த செயல்களைப் பார்த்துக்கொண்டிருந்த செல்வர் "ஐயா! நீர் யார்? எங்கு வந்தீர்"? என்றார். அதற்கு அவர் "நான் இருப்பது சிதம்பரம், தங்கள் வீட்டில் வேலைக்கு ஆள் தேவை என்று கேள்விப்பட்டேன். எனக்கும் என் மனைவிக்கும் உண வளித்தால் போதும். உணவு தருவதற்காக அவ்வேலையைத் தரவேண்டும்" என்று வேண்டினார். "உடம்பும் உள்ளமும் சுத்தமாக உள்ள நீரே என் வேலையைப் பாரும்" என்று உத்தரவளித்தார். மற்றவர்கள் நம்மிடம் இவை இல்லையே என்று வெட்கிச் சென்றனர்.

**(19) புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்.**

*(பதவுரை) புறம் - (ஒருவனுக்கு) உடம்பு, தூய்மை - சுத்தமாகுந் தன்மை, நீரான் அமையும்-தண்ணீரால் உண்டாகும், அகம் தூய்மை-(அதுபோல) மனம் சுத்தமாகுந் தன்மை, வாய்மையான்-உண்மை பேசுவதால், காணப்படும்-உண்டாகும்.*

*(கருத்து) குளிப்பதால் உடல் சுத்தமும், உண்மை சொல்லுவதால் மனச்சுத்தமும் உண்டாகும்.*

*(கேள்வி) மனத்தூய்மையும் உடல் தூய்மையும் உண்டாகச் செய்ய வேண்டியவை எவை?*

## வெகுளாமை

உழவன் தன் விளைந்த நிலத்தில் உள்ள பயிரை மாடு மேய்வதைக் கண்டு ஓட்டமாக ஓடினான். ஓடிப் பார்க்கும் போது பயிர் மிகுதியாக அழிந்திருப்பதைப் பார்த்துப்

பெருங் கோபத்துடன் தன் கையில் இருந்த அரிவாளை அம்மாட்டின் மேல் வீசி எறிந்தான். அவ்வாள், வேகத்தால் அயல் வயலில் நின்ற ஆளின் காலை வெட்டியது. அந்த ஆள் இவனைப் பிடித்து வந்து நீதித்தலைவரிடம் விட, அவர் ஆறுமாதம் சிறை வாசம் விதித்தார். அப்போது உழவன் "நம் மாட்டை விரட்டாமல் கோபம் கொண்டதால் மீதியுள்ள விளைவையும் அறுக்காமல் இவ்விதக் குறைவையும் அடைந்தோமே" என்று வருந்தினான்.

**(20) தன்னைத்தான் காக்கின் சினம் காக்க : காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்.**

*(பதவுரை) தன்னைத்தான் காக்கின்-(ஒருவன்)தன்னை துன்பம் அடையாமல் காக்க எண்ணினால், சினம்-(தன் மனத்தில்) கோபங் காக்க-வராமல் தடுக்க, காவாக்கால்-காக்காதவன் ஆனால், சினம்-அக்கோபம், தன்னையே-அவனையே, கொல்லும்-கெடுக்கும் துன்பங்களை அடைவிக்கும்.*

*(கருத்து) கோபம் உண்டாகாமல் தடுத்தல் வேண்டும்.*

*(கேள்வி) 1. தன்னையே அழிப்பது எது?*

*2. மக்கள் தம்மிடம் எது வராமல் தடுத்தல் வேண்டும்?*

## இன்னா செய்யாமை

*(இன்னா - துன்பம்)*

பாண்டவர்கள் ஐவருக்கும் உரிய பாகத்தைத் தானே ஆளவேண்டும் என்ற ஆசை துரியோதனனுக்கு உண்டாயிற்று. அதனால் அவன் அவர்களுக்குப் புது மாளிகையாக ஒன்று அரக்கினால் கட்டச் சொன்னான். அவர்களையும் அங்கே குடியிருக்க ஏற்பாடு செய்தான். அவர்களும் அங்கே தங்கி வாழ்ந்து வந்தார்கள். நடு இராத்திரியில் நெருப்பு வைத்து அவர்களை அழித்து விடும்படி செய்தான். அவ்விதமே நெருப்பு வைக்க, வீமன் அதை முன்னமே

தெரிந்திருந்தமையால், ஏனையோர்களைப் பாதுகாத்தான். முடிவில், தான் துன்பம் செய்து அவர்கள் சொத்துரிமையைப் பிடுங்க எண்ணிய அவன் தன் சொத்துக்களை அவர்களுக்குக் கொடுத்து, தான் அழிந்து போனான் நாம் பிறர்க்குச் செய்யும் துன்பம், நமக்கே துன்பமாக வரும் என்று எண்ணும் மனக்குற்றம் இல்லாதவர் மேலான செல்வம் வரினும் பிறருக்குத் துன்பம் செய்ய மாட்டார்கள்.

(21) சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

*(பதவுரை) சிறப்பு ஈனும்-மேன்மையைத் தரும் (மந்திரம்) முதலாகிய, செல்வம்-பொருள்களை, பெறினும்-(பிறர்க்குத் துன்பம் செய்து) அடையலாம் ஆயினும், பிறர்க்கு - அயலார்க்கு, இன்னா செய்யாமையே-துன்பம் செய்யாமையே, மாசு அற்றார்-மனக்குற்றம் இல்லாதவரது, கோள்-துணிவு ஆகும்.*

*(கருத்து) பெருஞ் செல்வம் கிடைப்பதாயினும் பிறர்க்குத் துன்பம் செய்தலாகாது.*

*(கேள்வி) மாசற்றவரது கோள் எது?*

## இறை மாட்சி

*(மாட்சி-நற்குண நற்செய்கைகள்)*

தமிழ் நிலத்தின் ஒரு பகுதியாகிய சேரநாட்டை ஆண்ட செங்குட்டுவனை வட நாட்டரசராகிய கனக விசயர்கள் "எம் போன்ற அரசரிடம் சேரன் செங்குட்டுவன் வீரம் செல்லாது" என்று இகழ்ந்தார்கள். இச்சொல்லை செங்குட்டுவன் காதில் ஒற்றர்கள் சொன்னார்கள். இதைக்கேட்டதும் இவன் தன் சேனைத்தலைவனாகிய வில்லவன் கோதையுடன் புறப்பட்டுப் போய் அவர்களை வென்று, அவர்கள் தலையில் தன் நாட்டிற்குக் கண்ணகிப் படிவத்திற்கு எடுக்கும் கல்லைத் தூக்கி வைத்து அழைத்து வந்தான். அதைக்கண்ட மற்ற அரசர்கள், சேரனுடைய

விரைவான முயற்சியையும் வீரத்தையும் அவை உண்டாவதற்குரிய வித்தையின் மேம்பாட்டையும் புகழ்ந்தார்கள். இதனால் இம் மூன்றும் உள்ளவரே நிலத்தை ஆளும் அரசர் என்று புகழப்படுவார்கள்.

**(22) தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு.**

(பதவுரை) நிலன் ஆள்பவற்கு-பூமியை ஆளும் செல்வமுடையவனுக்கு, தூங்காமை-எடுத்த காரியத்தில் விரிவுடைமையும், கல்வி-அவை அறிதற்குரிய வித்தையும், துணிவுடமை-ஆண்மையும் (ஆகிய) இம்மூன்றும்-இந்த மூன்று குணங்களும், நீங்கா-(எப்பொழுதும்) விலகா.

(கருத்து) விரைந்து செயலும், கல்வியும் வீரமும், ஆளும் அரசரிடம் இருக்க வேண்டும்.

(கேள்வி) நிலனாள்பவற்குவேண்டியகுணங்கள் எவை?

## கல்வி

துரோணரிடம் வந்து ஒரு வேடன் தனக்கு வில் வித்தைகற்றுக் கொடுக்கவேண்டும் என்று வேண்டினான். அவர் அப்போது அர்ச்சுனனுக்குக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்ததால் "ஒழிவில்லை" என்றார். அவ்வேடன், அவரைப் போலவே ஒரு உருவம் செய்து அவ்வுருவத்தின் முன்னிலையில் எல்லாக் கலைகளையும் சந்தேகம் இல்லாமல் கற்றான். சில நாள் சென்றபின் அவ்வுருவச் சிலையை நாய் வந்து குறைவு செய்ததைக் கண்டு இவன் கோபம் கொண்டு அம்பை விட்டான். அந்த அம்பு நாயின் பல இடங்களிலும் துளைத்துக் கொண்டு வெளியே வந்தது. அந்த நாயைக் கண்ட துரோணர், இவன் ஐயம் திரிபு அறியாமை இல்லாமல் கற்றமைக்கு ஆச்சரியம் கொண்டார். நாயை இவ்வாறு அம்பெய்தவன் மற்றவர்களை என்ன செய்யமாட்டான். இவனிடம் ஒழுங்கில்லை என்று இவன் பிற உயிரைக் கொல்லாதிருக்கக் கட்டை விரலைக்

குருதட்சணையாகப் பெற்றார். இதனால் கற்றபடி ஒழுங்காக நடப்பதே கல்வியின் பயனாகும்.

(23) கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

*(பதவுரை) கற்பவை - ஒருவன் கற்கவேண்டிய நூல்களை, கசடு அற - (ஐயம், திரிபு, அறியாமை) ஆகிய குற்றம் இல்லாமல், கற்க - படிக்க, கற்றபின் - படித்தபின், அதற்குத் தக - அந் நூல்கள் சொல்லும் ஒழுக்கவழியில், நிற்க - ஒழுகக் கடவன்.*

*(கருத்து) குற்றமில்லாமல் நூல்களைக் கற்று அவை கூறும் வழியில் நடத்தல் வேண்டும்.*

*(கேள்வி) 1. நூலை எவ்வாறு கற்றல் வேண்டும்?*
*2. நூலைக் கற்றபின் யாது செய்தல் வேண்டும்?*

பிறந்து வளர்ந்தது முதல் தன் குடும்ப காரியங்களையும் உழு தொழிலையும் கவனித்து வந்த ஒருவனுக்கு விவாகம் நடந்தது. இவன் தன் மனைவி வீட்டிற்குப் போனபோது, மாமியார் அயல் ஊரில் இருந்து நெல் விற்று வந்த 100 ரூபா நோட்டையும், அதன் விபரம் எழுதிய கடிதத்தையும் கொடுத்து என்ன எழுதியிருக்கிறது என்றாள். நோட்டில் போட்டிருக்கும் எண்ணும் தெரியவில்லை கடிதத்தில் உள்ள எழுத்தும் தெரியவில்லை, அழுதான். அதைக்கண்ட மாமியார், ஏன், என்று கேட்க "என் கண்கள் குருடாய் இருக்கின்றனவே, இவற்றைக் காணத்தெரியவில்லையே" என்றான். பின் தக்க ஆசிரியரைவைத்து, எண்ணும் எழுத்தும் பார்க்கும்படியான கண்களை உண்டாக்கி உதவினாள்.

(24) எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

(பதவுரை) எண் என்ப - (அறியாதார்) கணக்கு என்று சொல்வனவும், ஏனை - மற்றென்றாகிய, எழுத்தென்ப - இலக்கணம் என்று சொல்வனவும், இவ்விரண்டும் - இந்தக் கலைகள் இரண்டையும், வாழும் உயிர்க்கு - (அறிந்தார்) சிறப்புள்ள மக்கள் உயிர்க்கு, கண் என்ப - விழிகள் என்று சொல்வார்கள்.

(கருத்து) எண்ணும் எழுத்தும் மக்களுக்குக் கண் எனத்தகும்.

(கேள்வி) மக்களுக்கு எவை கண்களாகும்?

## கல்லாமை

சீர்காழிக் கருகே உள்ள வள்ளுவக்குடி என்ற ஊரில் வெற்றிவேல் என்ற பெயருள்ள வள்ளுவர் குலத்தில் உதித்த ஒருவன் சோஸ்ய நூல்களைக் கற்று வல்லவனாய் இருந்தான். அவனை அப்பக்கத்தில் உள்ள அந்தணர் முதலிய மேல் குலத்தில் உதித்த எவரும் சோஸ்யம் கேட்காமல் எந்தக்காரியமும் செய்ய மாட்டார்கள். அதனால் அவன் வீட்டில் எப்பொழுதும் மக்கள் திரள் திரளாகச் சேர்ந்துகொண்டே யிருப்பார்கள். அவனிடத்தில் சோஸ்யக் கல்வி யிருப்பதால், மேல் குலத்தில் உதித்த மக்களும் தாழ்ந்த குலத்தில் உள்ள இவன் வீட்டுக்கு வந்து இவன் பேச்சைக் கேட்கக் காத்துக் கொண்டிருப்பார்களானால், கல்வியின் பெருமை எவ்வளவு சிறப்புடையது பாருங்கள்.

**(25) மேற்பிறந்தாராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்தும் கற்றார் அனைத்திலர் பாடு.**

(பதவுரை) கல்லாதார் - படிக்காதவர் மேற்பிறந்தாராயினும் - உயர்ந்த சாதியில் பிறந்தாராயினும், கீழ்ப்பிறந்தும் - தாழ்ந்த சாதியில் பிறந்தும் கற்றார் - படித்தவரது, பாடு அனைத்திலர் - பெருமை போன்ற பெருமை இலர்.

(கருத்து) குலத்தால் பெருமை இல்லை. கல்வியால் பெருமை உண்டு.

*(கேள்வி) குலம் கல்வி இவற்றில் சிறந்தது எது?*

## கேள்வி

பாடலிபுத்திரம் என்ற நகரைச் சுதரிசனன் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் பிள்ளைகளுக்கு வயது நிரம்பியும் அவர்கள் அறிவில்லாத மூடர்களாய் இருந்தார்கள். அதனால் அரசர், நம்மிடம் மிகுதியான செல்வம் இருந்தும் நம் பிள்ளைகளுக்கு அறிவில்லாமையால் இவை பயனில்லையே கல்வி கற்பதில் ஆசையில்லாத முரடர்களாய் இருக்கிறார்களே, என்ன செய்யலாம் என்று வருந்தினன்.

அப்போது சோமசன்மா என்பவர் எழுந்து "இச் செல்வங்கள் எல்லாவற்றையும் விடச் சிறந்த செல்வமாகிய கேள்விச் செல்வத்தை அளிக்கும் திறமை என்னிடம் உள்ளது. நீர் உமது பிள்ளைகளை என்னிடம் ஒப்படைத்தால் ஆறு மாதத்தில் வல்லவர்களாகச் செய்வேன்" என்று அப்பிள்ளைகளைத் தம்மிடம் அழைத்துக் கொண்டு போய் நீதி சாஸ்திரத்தை ஐந்து கதையாகச் சொல்லி அறிவுடையவராக்கினார். இதைக்கண்ட அரசரும் கேள்விச் செல்வமே மேலான செல்வம் என்று புகழ்ந்து சோமசன்மா விரும்பியதைக் கொடுத்தார்.

**(26) செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.**

*(பதவுரை) செல்வத்துள் செல்வம் - ஒருவனுக்கு நெல், மணி முதலிய செல்வத்தைவிடச் சிறந்த செல்வமாவது, செவிச் செல்வம் - காதால் வரும் கேள்விச் செல்வம் ஆகும். அச்செல்வம் - அக்கேள்விச் செல்வம், செல்வத்துள் எல்லாம் - நெல் மணி, பொன் முதலிய பிற செல்வங்கள் எல்லாவற்றிலும், தலை - முதன்மையாகும்.*

(கருத்து) கேள்விச் செல்வமே அழியாத செல்வம்.

(கேள்வி) *செல்வத்தில் தலையாய செல்வம் எது?*

## அறிவுடைமை

விஜயபுரி மன்னருக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்களில் மூத்தவனைவிட இளையவன் அறிவுடையவனாய் விளங்கினான், அரசருக்கு இளையவனுக்கே அரசைக்கொடுக்க ஆசை. அப்பரம்பரையின் வழக்கம் மூத்தவனே அரசு ஆளவேண்டும் என்பதாகும். இதனால், அரசர் இவ்விருவரிடத்திலும் இரண்டு செப்புகளைக் கொடுத்து வெவ்வேறு அரசர்களிடம் கொடுத்துவரச் சொன்னார். மூத்தவன் கொண்டுபோய்க் கொடுக்க அவ்வரசன் அதில் சாம்பலும் மயிரும் இருக்கக்கண்டு தன்னை அவமதித்ததாக எண்ணி, அவனைச் சிறையில் வைக்கக் கட்டளையிட்டான். இளையவன் கொண்டுபோய்க் கொடுக்க அவ்வரசன் கண்டு கோபிக்க, அரசே! என் தந்தை யாகம் நடத்தினார். அதன் முடிவில் இவை கிடைத்தன. இதைத் தங்களுக்கும் அனுப்பினார் என்றான். இதைக் கேட்டுத் தானும் அணிந்து மிகுந்த பொன்னை வெகுமதியாகக் கொடுத்து அனுப்பினான். இளையவன் வந்ததைக் கண்ட மன்னர், மூத்தவன் செய்தியை ஒற்றர் மூலம் அறிந்து அவ்வூர் மக்களிடம் சொல்ல அவர்கள் அறிவுள்ள இளையவனையே அரசனாக விரும்பினர். மூத்தவன் அறிவில்லாமையால் பரம்பரை பாத்தியத்தையும் இழந்து காட்டில் சென்று வாழலானான்.

**(27) அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார் என்னுடைய ரேனும் இலர்.**

*(பதவுரை) அறிவுடையார் - புத்தியுள்ளவர், எல்லாம்- (தம்மிடம் பொருள் முதலிய ஒன்றும் இல்லாதவராய் இருப்பினும்) எல்லாச் செல்வமும், உடையார் - பொருந்தியவர் ஆவர், அறிவிலார் - புத்தி இல்லாதவர், என் உடையரேனும் - எல்லாச் செல்வமும் உடையவராயினும், இவர் - ஒன்றும் இல்லாத வறியவர் ஆவார்.*

(கருத்து) எல்லாச் செல்வமும் அளிப்பது அறிவே.

(கேள்வி) 1. அறிவு அறியாமையால் வருவன எவை?

2. எல்லாச் செல்வமும் உடையவர் எவர்?

## குற்றங் கடிதல்

"புலி வருகிறது புலி வருகிறது" என்று பேர் இரைச்சலாக ஒருவன் போட்டான். மக்கள் வெளியே வந்து பார்க்கப் புலி யில்லாமையைக் கண்டு வெட்கிச் சென்றார்கள். இவ்விதம் பல நாள் பலமுறை மக்களை ஏமாற்றி வந்தான் ஒருநாள் உண்மையாகவே புலி வந்து விட்டது. கத்தினான். பலதரம் கத்தினான்; எவரும் வரவில்லை; உண்மையாக வந்த புலி அடித்துக் கொன்று விட்டது. மக்களை ஏமாற்றுதல் என்ற குற்றம் அவன் செய்யாமல் இருந்தால் மக்கள் வந்து அவனைக் காத்திருப்பார்கள். இதனால் குற்றம் செய்தல் ஆகாது.

(28) **வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**
**வைத்தூறு போலக் கெடும்.**

*(பதவுரை)* வருமுன்னர் - குற்றம் வருவதற்கு முன் காலத்திலே, காவாதான் - அக்குற்றத்தைப் பாதுகாக்காதவனது, வாழ்க்கை - வாழ்வு (அக்குற்றம் வந்தால்) எரிமுன்னர் - நெருப்பின் எதிரில், வைத்தூறுபோல - (இருந்த) வைக்கோல் போர் போல, கெடும் - அழியும்.

(கருத்து) சிறிது குற்றமாயினும் பெருந் துன்பம் வருதலால் குற்றம் செய்தலாகாது.

(கேள்வி) 1. எரிமுன்னர் வைத்தூறுபோல அழிவது எது?

2. குற்றம் வரும் முன்னர்க் காவாதவன் வாழ்க்கை எவ்வாறாகும்?

## பெரியாரைத் துணைக்கோடல்

(கோடல் - கொள்ளுதல்)

திங்களூரில் அப்பூதி அடிகள் என்ற ஒரு அந்தணர் இருந்தார். அவர் திருநாவுக்கரசர் நாமத்தையே செபித்து வந்தார். தன் பொருள்களுக்கும் அப் பெயரையே வைத்தார். ஒருநாள் திருநாவுக்கரசரே நேரில் வந்து தம் வீட்டில் சாப்பிட வந்தார். அதற்காக இலை நறுக்கச் சென்ற மூத்த மகன் திருநாவுக்கரசு பாம்பு தீண்டி இறந்தான். அக் குழந்தையை எழுப்பிக் கொடுத்து அவ்வப்பூதி அடிகளுக்கு நல்வழியை உபதேசித்த திருநாவுக்கரசர் மனமகிழும்படி உணவளித்து அவர் பெயரையே துணையாகக் கொண்டு ஒழுகியதால் அப்பூதியடிகள் மேன்மையை அடைந்தார்.

**(29) உற்றநோய் நீக்கியுறு அமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.**

*(பதவுரை) உற்ற நோய் - (தெய்வம் மக்களால்) தனக்கு வந்த துன்பங்களை, நீக்கி - (விலக்குமாறு அறிந்து) விலக்கி, உறுமை - (பின் அவ்விதமான துன்பம்) வராத விதம், முன் காக்கும் - முன்னறிந்து காக்கவல்ல, பெற்றியார் - தன்மை யுடையாரை, பேணி - (அவர்) மகிழ்வன செய்து, கொளல் - துணையாக அடைக.*

*(கருத்து) துன்பத்தை நீக்கிக் காக்கும் பெரியாரைத் துணையாகக் கொள்க.*

*(கேள்வி) எப்பெரியாரது நட்பைப் பேணிக்கொளல் வேண்டும்?*

## சிற்றினஞ் சேராமை

பாண்டியர் நீதி நெறி வழுவாமல் ஆட்சி செலுத்தினார்கள். பாண்டியன் நெடுஞ் செழியனுக்குப் பொற்கொல்லன் ஒருவன் நட்பாக இருந்தான். அவன் தன் அரசியின் பொற்சிலம்பை எடுத்துக்கொண்டு கோவலன்

விற்க வந்த சிலம்பை அரசி சிலம்பு என்று காட்டி அரசன் உத்தரவு வாங்கிக் கொலையாளியைக் கொண்டு அக் கோவலனையும் கொல்வித்தான். பின் கண்ணகியால் உண்மை தெரிந்து இதுவரை நீதி தவறாத அரசு பொற் கொல்லன் பேச்சைக் கேட்டதால் கெட்டது என்று தன் உயிரை அப்போதே மாய்த்துக்கொண்டான். இதனால் தண்ணீர், நிலத்தைச் சேர்ந்த உடன் நிறம் மாறுதல்போல அறிவும் இனத்துடன் சேர்ந்தால் அவ்வினமாக மாறும்.

(30) **நிலத்தியல்பால் நீர்த்திரிந் தற்றாகும்; மாந்தர்க்கு இனத்தியல்பது ஆகும் அறிவு.**

*(பதவுரை) நிலத்து இயல்பால் - தான் சேர்ந்த பூமியினது தன்மையால், நீர் - தண்ணீர், திரிந்து அற்று ஆகும் - தன் தன்மை வேறுபட்டு அப்பூமியின் நிறத்தை அடையும், மாந்தர்க்கு - (அதுபோல) மக்களுக்கு, இனத்து இயல்பு - தாம் சேர்ந்த கூட்டத்தினது தன்மையால், அறிவு - புத்தியும், அது ஆகும் - தன் குணம் மாறுபட்டு அக் கூட்டத்தின் குணமாம்.*

*(கருத்து) அறிவு தான் கூடிய கூட்டத்தின் குணத்தை அடையும்.*

*(கேள்வி) நிலத்தைச் சேர்ந்த நீரும் இனத்தைச் சேர்ந்த அறிவும் என்ன ஆகும்?*

## வலியறிதல்

சேரநாட்டை ஆண்ட பெருஞ்சேரலாதன் என்பவன் நில ஆசைகொண்டு சோழநாட்டை ஆண்ட கரிகாற்சோழனோடு தன் செல்வநிலையை அறியாது போர் செய்ய வந்தான். இருவருக்கும் வெண்ணிப் பறந்தலை என்ற இடத்தில் போர் நிகழ்ந்தது. சோழன் விட்ட அம்பு மார்பைத் துளைத்துக்கொண்டு வெளியே சென்ற புறப்புண்ணுக்கு வெட்கிச் சேரன் உயிரை விட்டான். இதனால் தமக்குரிய

செல்வ நிலையை அறிந்து வாழ்தல் வேண்டும். அளவறியாது மேலும் மேலும் முயற்சித்தால் அழிதல் உண்டாகும் என்பதை மரக்கிளையின் உச்சியில் இருப்பவன் மேலும் மேலும் ஏற முயற்சித்தால் அழிவான் என்ற உவமை அறிவிக்கிறது. இவ்வுவமை பிறிது மொழிதல் அணி.

**(31) நுனிக்கொம்பர் ஏறினு ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி ஆகி விடும்.**

*(பதவுரை) கொம்பர் நுனி ஏறினுர் - மரக்கிளையின் உச்சியில் ஏறி நின்றவர், அஃது இறந்து ஊங்கின் - (தம் முயற்சியால்) அவ்வுச்சியைக் கடந்து மேலும் ஏற முயற்சிப்பாராயின், உயிர்க்கு - (அம்முயற்சி) தம் பிராணனுக்கு, இறுதியாய்விடும் - அழிவாய் முடியும்.*

(கருத்து) தம் செல்வ அளவறிந்து வாழ்தல் வேண்டும்.

(கேள்வி) தன் அளவு நினையாது ஊக்கத்தால் பகையை வெல்லக் கருதுபவன் யாதடைவான்?

## காலமறிதல்

கைகேயிக்குத் தோழியாய் இருந்த கூனிக்கு முதுகு வளைந்திருந்தது. அதனுல் இராமன் அவள் முதுகில் வில்லால் அடித்து விளையாடுவது வழக்கம். வில் அடி முதுகில் படும்போது உண்டாகும் துன்பம் தாங்க முடியாதாயினும், காகம் வல்லமையுள்ள கோட்டானைப் பகல் பொழுதில் அழித்தல் போல சமயம் வரும்போது துன்பம் செய்யலாம் என்று அவ்வடிகளைப் பொறுத்திருந்தாள். முடி சூட்டும் காலம் வந்தது. கைகேயியைத் தூண்டிப் பரதன் முடி சூடவும், இராமன் காட்டிற்கு ஓடவும், தசரதன் கொடுத்த இரண்டு வரங்களால் இராமனைக் காட்டிற்கு ஓடும்படி செய்தாள். இதனுல் சமயம் அறிந்து செய்பவர் தன் பகையின் வல்லமையை அழிப்பர் என்பது தெரிகிறது.

(32) பகல்வெல்லும் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

(பதவுரை) கூகையை - (தன்னின் வல்லமை உள்ள) கோட்டானை, காக்கை - காகம், பகல் வெல்லும் - பகற் பொழுதில் அழிக்கும், இகல் - (அது போல பகைவரது) வலிமையை வெல்லும் அழிக்க எண்ணும், வேந்தர்க்கு - அரசர்க்கு, பொழுது வேண்டும் - அதற்கு ஏற்ற சமயம் அறிய வேண்டும்.

(கருத்து) தக்கசமயம் பார்த்துப் பகைவரின் வலிமையை அழிக்க வேண்டும்.

(கேள்வி) 1. காக்கை கூகையை எப்பொழுது வெல்லும்?

2. பகைமையை அழிக்க அரசர்க்கு எது வேண்டும்?

## இடனறிதல்

வாலி என்ற குரங்குவேந்தன் ஒருவன் இருந்தான். அவன் எதிரில் நின்று போர் செய்தால் எதிரியின் பலத்தில் பாதி தனக்கு வந்ததாக எண்ணிப் போர் செய்தான். இதனால் அவனிடம் எல்லோரும் தோற்றனர். இக்கருத்தை அறிந்த இராமன், பெரிய தேர் கடலில் ஓடாது கடலில் ஓடும் கப்பலும் நிலத்தில் செல்லாது. அதனால் இவன் எதிரில் நின்று போர் செய்தல் கூடாது. மறைவாக நின்று இவனைக் கொல்வதே தக்கவழி என்று மறைவாக இருந்து அம்பெய்து கொன்றார். பகைவர்கள் இடங்களை அறிந்து அதற்கேற்பப் போர் செய்தல் வேண்டும் என்ற கருத்தை இந்த உவமைகள் அறிவிப்பதால் பிறிது மொழிதல் அணி.

(33) கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.

(பதவுரை) கால்வல் - (பூமியின் இடத்தில் செல்லும்) சக்கரம் உறுதியான, நெடுந்தேர் - பெரியதேர்கள், கடல் ஓடா - சமுத்திரத்தில் செல்லமாட்டா, கடல் ஓடும் - அச் சமுத்திரத்தில் செல்லும், நாவாயும் - தோணியும், நிலத்து ஓடாத பூமியின்கண் செல்லமாட்டா.

(கருத்து) பகைவர் இடங்களை அறிந்து அவ்விடத்திற் கேற்பப் போரிடுதல் வேண்டும்.

(கேள்வி) தேரும்தோணியும் அறிவிக்கும் நீதி என்ன?

## சுற்றந்தழால்

பெருஞ் சித்திரனுர் என்ற ஒரு தமிழ்ப் புலவர் இருந்தார். அவர் வறுமையால் வாடியதைக் கண்ட அரசர் அவர் வறுமை நீங்கும்படியான பெருஞ் செல்வத் தைக் கொடுத்தார். அதனைப் பெற்றுவந்து தன் மனைவி யிடம் கொடுத்து "நீ நம் குழந்தைகளுக்கு வேண்டியதை இப்பொருள்களைக் கொண்டு செய்வதுடன் நம்போல் வறுமையால் வாடும் உறவினர்களுக்கு வேண்டியதையும் இச்செல்வத்தில் கொடுத்து உதவி செய்" என்ருர். அவ் வம்மையாரும் எல்லோருக்கும் அளித்துத் தாமும் வறுமை நீங்க வாழ்ந்தார். இவ்வித மனப்பண்பு சிலருக்கே உண்டு.

**(34) காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமும்
அன்ன நீரார்க்கே யுள.**

(பதவுரை) காக்கை - காகங்கள், கரவாது - (தமக்கு இரை கிடைத்தபோது) மறையாது, கரைந்து - (இனத்தை அழைத்து) உண்ணும் - (அதனேடு கூட) சாப்பிடும், ஆக்க மும் - (சுற்றத்தாரால் அடையும்) செல்வங்களும், அன்ன நீரார்க்கே - அவ்விதமான குணம் உள்ளவர்க்கே, உள - உள்ளன ஆகும்.

(கருத்து) உறவினர்க்களித்து உண்பவனே பெருஞ் செல்வன் ஆவான்.

(கேள்வி) காக்கை எவ்வித குணம் உடையவர்க்கு ஒப்பாகும்?

## பொச்சாவாமை

அபிமன்யுவைக் கொன்ற சயத்தரனை நாளை மாலைக்குள் கொல்வேன். அல்லது தீயில் விழுந்து சாவேன் என்று சபதம் கூறி அருச்சுனன் அதையே எண்ணிக் கொண்டிருந்தான். பொழுதுபோனதும் தீ வளர்த்துவிட்டார்கள். அருச்சுனன் விழப்போகிறான். அதைப் பார்க்கக் காலை முதல் மறைந்திருந்த சயத்தரன் வந்தான். கண்ணன் அர்ச்சுனா! இன்னும் சூரியன் மறையவில்லையே என்று சொல்ல அதே நினைவுடன் இருந்த அருச்சுனன் அம்பை விடச் சயத்தரன் இறந்தான். மறதியில்லாமல் எண்ணிக்கொண்டே இருந்தால் எக்காரியத்தையும் முடிக்கலாம்.

(35) உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தான்
உள்ளிய துள்ளப் பெறின்.

(பதவுரை) மற்றும் உள்ளியது - மேலும் நினைத்த அதையே, உள்ளப் பெறின் - நினைத்துக் கொண்டிருந்தால், தான் உள்ளியது எய்தல் - (ஒருவன்) அவன் நினைத்த காரியத்தை எண்ணிய விதமே முடித்தல், எளிது - சுலபம் ஆகும். (மன் - அசைச்சொல்)

(கருத்து) மறதியில்லாமல் முயன்றால் எக்காரியமும் முடியும்.

(கேள்வி) எண்ணிய காரியத்தை எண்ணியவாறு முடிப்பவர் எவர்?

## செங்கோன்மை

காவிரிப்பூம் பட்டினத்தை அரசு ஆண்ட கரிகாலன் வேளூர் என்ற பெயரையுடைய ஊரைக் காணச்

சென்றான். அப்போது அவ்வூரில் உள்ள மக்கள் திரளாக நின்று வரவேற்றனர். அவர்கள் வரவேற்பை ஏற்றுக் கொண்டு, சோழன் மழைவளத்தால் உண்டாகும் விளைவு களைப் பெற்றுச் சுகமாக வாழ்கிறீர்களா? என்றான். அப்போது குடிகள் "மழையால் கிடைக்கும் விளைவைப் பிறர் எடுத்துக்கொள்ளாமல் அவர் அவர்களே அனுபவிக் கும்படியான தங்கள் செங்கோலின் காவலால் வாழ்கி றோம்" என்றார்கள். இதைக் கேட்ட அரசன் மக்கள் தன்னையே உயிராக எண்ணி இருக்கிறார்கள் என்று கருதி, அவர்களுக்கு எவ்விதத் துன்பமும் வராமல் காத்தான்.

(36) வானோக்கி வாழு முலகெல்லாம் மன்னன்
கோனோக்கி வாழுங் குடி.

*(பதவுரை) உலகு எல்லாம் - பூமியில் உள்ள உயிர் கள் யாவும், வான் நோக்கி - மழையை எதிர்பார்த்து, வாழும் - பிழைக்குமே ஆனாலும், குடிமன்னன் கோல் - குடித்தனம் செய்வோர் அரசன் செங்கோலை, நோக்கி வாழும் - எதிர்பார்த்துப் பிழைப்பார்கள்.*

*(கருத்து) மக்கள் அரசன் காவலால் வாழ்வார்கள்.*

*(கேள்வி) உலகும் குடியும் எவற்றை நோக்கிப் பிழைக்கும்?*

## ஊக்கமுடைமை

சாவித்திரி என்ற ஒரு பெண்மணி இருந்தாள். அவள் தன் கணவன் உயிரை யமன் பிடித்துப் போனதாக அறிந்தாள். உடனே அவள் உள்ளம் "அழுவதால் பயனில்லை" என்று அறிவுறுத்தியது. யமன் இருக்கும் இடத்தை அடைந்து அவனை வணங்கி 'ஒரு வரம் வேண்டும்" என்றாள். என்ன என்று கேட்க "மாங்கல் யப் பிச்சை தரவேண்டும்" என்றாள். "தந்தேன்" என்று

யமனும் வாக்களித்தான். பின் "என் கணவன் உயிர் தங்கள் கையில் இருக்கிறது" என்று சொல்ல, அவன் பேசாது அவள் கணவன் உயிரை ஈந்தான். அவள் உள்ளத்தில் எழுந்த ஊக்கத்தால் மக்கள் அனைவராலும் அவள் போற்றப்படுகிறாள்.

(37) வெள்ளத் தனைய மலர்நீட்டம் : மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

*(பதவுரை) மலர் நீட்டம்-நீர்ப்பூக்கொடியின் உயர்வு, வெள்ளத்து அனைய - (குளத்தில் நிற்கும்) தண்ணீர் அளவாகும், மாந்தர்தம் உயர்வு - அதுபோல், மக்களினது மேன்மை, உள்ளத்து அனையது - அவர் உள்ளத்தில் உள்ள ஊக்கத்தின் அளவாகும்.*

*(கருத்து) ஊக்கம் உள்ள மக்கள் பெருமையை அடைவர்.*

*(கேள்வி) 1. எவ்வித மக்கள் உயர்வை அடைவார்கள் ?*
*2. மலர் நீட்டம் எதன் அளவாகும் ?*

## மடியின்மை

வேலன் என்ற ஒருவன் இருந்தான். சிறு வயதிலேயே தந்தையை இழந்துவிட்டான். எப்பொழுதும் தூக்கத்தில் இருப்பான். தாய் வந்து சண்டைபோட்டு 'அப்பா ! நிலத்திற்குப்போ' என்றால் 'நாளைக்குப் போகிறன்' என்பான். மறுநாள், கோயில் கண்ட இடங்களில் உட்கார்ந்து காலங் கழித்துச் சாப்பிடும் வேளைக்கு வருவான். அது சமயம் தாய் நிலத்தைப் 'பார்த்தாயா' என்றால் 'மறந்து விட்டேன்' என்பான். இவற்றால் அவன் விரைவில்லாமை, மறதி, சோம்பல், தூக்கம் ஆகிய நான்கு தோணிகளிலும் ஏறிச்சென்றதால் தன் சொத்தை இழந்து ஏழை ஆனான்.

(38) நெடுநீர் மறவி மடிதுயி லுன்குங்
கெடுநீரார் காமக் கலன்.

*(பதவுரை)* மடி, நெடு நீர், மறவி, துயில் - சோம்பல், விரைந்து செய்யாமை, நினைவில்லாமை, தூக்கம் ஆகிய, நான்கும்-இந்நான்கும், கெடும் நீரார்-அழியும் குணத்தை யுடையவர், காமக்கலன்-விரும்பி ஏறும் தோணியாகும்.

*(கருத்து)* இந்நான்கு குணமும் இல்லாதவர் பெருமை அடைவர்.

*(கேள்வி)* 1. எக்குணத்தை அடைபவர் அழிவர்?
2. கெடு நீரார்க்கு எவை நான்கும் காமக் கலன் ஆகும்?

## ஆள்வினை உடைமை

(ஆள்வினை - முயற்சி)

தனவந்தர் ஒருவருக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர் இறக்கும்போது தன் பொருளை இருவருக்கும் பங்கிட்டுக்கொடுத்தார். மூத்தவன், முயற்சியுடன் மேலும் மேலும் வியாபாரம் செய்து பொருளை வளர்த்து வந்தான். இளையவன் தந்தை தந்தபொருளைச் சிறிது சிறிதாகச் செலவழித்துச் சாப்பிட்டு வந்தான். சிறிதுகாலம் சென்றவுடன், இளையவன் வறுமையுடையவன் ஆனுன். மூத்தவன் பெருஞ் செல்வனுக விளங்கினுன். இவற்ருல், முயற்சி செல்வத்தை வளர்க்கும் என்றும், முயற்சி இல்லாமை வறுமையை உண்டாக்கும் என்றும் விளங்குகிறது.

(39) முயற்சி திருவினை ஆக்கும் முயற்று இன்மை
இன்மை புகுத்தி விடும்.

*(பதவுரை)* முயற்சி-முயற்சியானது, திருவினை-செல்வத்தை, ஆக்கும்-வளர்க்கும், முயற்றின்மை-சோம்பல்,

இன்மை - வறுமையை, புகுத்திவிடும் - கொண்டுவந்து சேர்க்கும்.

(கருத்து) முயற்சி செல்வத்தை அளிக்கும்.

(கேள்வி) செல்வத்தைத் தருவது எது ? வறுமையை அளிப்பது எது ?

## இடுக்கணழியாமை

(இடுக்கண்-துன்பம்)

சிவாஜி என்ற வீர ஒரு அரசர் இருந்தார். அவர் ஆண்ட கோட்டைகளையும் அரண்மனைகளையும் மொகலாய அரசர்கள் வந்து கைப்பற்றிக் கொண்டார்கள். அப்போது அவர் சிறிதும் மனவருத்தப் படவில்லை. தாம் வெளியே சென்றிருந்து பின் சில நாள் கழித்து கல்யாண வீட்டிற்கு வருபவர்போல் ஊருக்குள் வந்து இரவு கோட்டைக்குள் புகுந்து, அங்கு படுத்திருந்த மொகலாயத் தலைவன் விரலை வெட்டிப் பின் அவர்கள் இவரைப் பிடிக்க வரும்போது இவர் ஒரு பக்கமாக ஓடி மறைந்தார். பிடிக்க வந்த வீரர், எருமைக்கொம்பில் தீவட்டி கட்டிப் போவதைப் பார்த்து வெட்கித் திரும்பினர். இதனால் துன்பம் வந்ததை இன்பமாக எண்ணினால் மேலும் முயற்சிக்கலாம்.

(40) **வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்**
**உள்ளத்தி னுள்ளக் கெடும்.**

(பதவுரை) வெள்ளத்து அனைய இடும்பை-வெள்ளம் போலக் கரையில்லாத துன்பங்கள் எல்லாம். அறிவுடையான் - புத்தியுள்ளவன், உள்ளத்தின் - மனத்தினால், உள்ள கெடும் - நினைக்க அப்பொழுதே அழியும். (அதனால் இன்பமாக எண்ணல் வேண்டும்.)

(கருத்து) வரும் துன்பத்தை இன்பமாக எண்ணுதல் வேண்டும்.

(கேள்வி) அறிவுள்ளவன் உள்ளத்தை அழிப்பது எது?

### அமைச்சு

கூன்பாண்டியன் ஆட்சியில் சமணசமயம் பரவி, சிவன் கோவில் யாவும் பூட்டப்பட்டன. இதை அறிந்த அமைச்சர் குலச்சிறையார் தென்னாட்டில் உள்ள கோவில்களில் பூசை நடைபெறவும், மக்கள் வழிபடும் பெரும் பயனையும், அவ்வாறு செய்ததற்குரிய காலத்தையும் அதை அரசனுக்கு விளக்கும் வீரராகவும் உள்ள திருஞானசம்பந்தரை மதுரைக்கு அழைத்து, அரசனுக்கு உண்மை விளங்க எடுத்துக்காட்டி விளக்கியதால் இன்று சைவமும் ஒரு சமயமாக இடம் பெற்றிருக்கிறது.

தேடிய படைவீரரும், அழைத்தசமயமும், அரசனைத் திருத்திய முறையும், அத்திருத்தம் இன்றுவரை பயன் உள்ளதாகச் செய்த இவரே அமைச்சர் ஆவார்.

(41) கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு.

(பதவுரை) கருவியும் - (தொழில் செய்யும் பொழுது அதற்கு வேண்டும்) படையும், காலமும்-வெல்வதற் கேற்ற சமயமும், செய்கையும்-அத்தொழில் செய்யும் முறையும், செய்யும் அருவினையும்-செய்யும் சிறு முயற்சி பெரிய பயன் தரும் தொழிலும், மாண்டது அமைச்சு-(ஆகிய இவற்றை) ஆராய வல்லவனே அமைச்சன்.

(கருத்து) படை, சமயம், இடையூறு, பயன் இவற்றை ஆராய்பவனே அமைச்சன்.

*(கேள்வி) எவற்றை ஆராய்பவன் அமைச்சன் ஆவான்?*

## வினைத் தூய்மை

ஓர் அந்தணர் தாம் காசிக்குத் தம் தாயுடன் கால் நடையாக நடந்து சென்றார். செல்லும்பொழுது தாய்க் குத் தண்ணீர்த்தாகம் உண்டாகிக் களைப்பினால் படுத்தாள். அருகிலிருந்த ஒரு குடிசையில் சென்று கேட்க அவர்கள் தண்ணீர் தந்தார்கள். அத்தண்ணீரை வாங்கி வரும்போது அயலில் வலைகள் காயவைத்திருப்பதைக் கண்டு, வலைஞன் தந்தநீர் ஆகாது என்று ஊற்றிவிட்டு நெடுந்தூரத்தில் உள்ள ஆற்றில் போய்த்தண்ணீர் கொண்டுவந்து கொடுத் துத் தாயை எழுப்பினார். தாய் எழுந்து, மகனே! இவ் வளவு நேரமா? என நடந்ததைச் சொன்னார். நான் கேட் டால் வருத்தப்படாமல் என் தாகத் துன்பத்தையும் பார்க் காமல் கிடைத்த நீரை ஊற்றி, ஆற்று நீரைத்தந்த நீயே உத்தமன் என்று தன் மகனைத் தாய் போற்றினாள்.

(42) ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

*(பதவுரை) ஈன்றாள் - தன்னைப் பெற்ற தாய், பசி - பசியை, காண்பான் ஆயினும் - வறுமையால் பார்த்து வருந்துவான் ஆனாலும், சான்றோர்-அறிவுள்ளவர், பழிக் கும் வினை-அவமதிக்கும் தொழிலை, செய்யற்க-செய்யாது ஒழிக.*

*(கருத்து) தாயின் பசிபோக்க ஆயினும் அவமதிக்கும் தொழில் செய்யக் கூடாது.*

*(கேள்வி) சான்றோர் பழிக்கும் வினையை எப்பொழுதும் செய்தலாகாது.*

## நாடு

பொற்கைப் பாண்டியன் காலத்தில் மழை தவறாது பெய்ததால் தம் நாட்டில் விளைவு, செல்வம், நோயின்மை, இன்பம் ஆகிய இவற்றை மக்கள் அடைந்து கொண்டிருந்தனர். இவற்றைக் கேட்டுப் பிறரும் இவன் நாட்டையே அடைந்து வாழ்ந்தனர். இந்நாளில் தாம் ஆசைப்பட்ட காசியைப் பார்த்து வருகிறேன் என்று அந்தணர் மனைவியிடம் சொன்னார். அவள், துணையில்லையே என்றாள். அவர், அரசன் காவல் காக்கும் என்று சொல்லிப் போனார். இதை அரசன் கேட்டு அவர் வீட்டை காத்து வந்தான். போனவர் மீண்டும் வந்து சேர்ந்தார். இரவு பேச்சுக் கேட்டது. பேச்சைக்கேட்டு அரசன் கதவைத் தட்டினான். அந்தணர் யார் என்று வர மறைந்து. மறுநாள் காலை, நீர் காசி போனது முதல் பேச்சுக் கேட்கவில்லை, நேற்றுக் கேட்டது. அதனால் தட்டினேன் என்று தன் கையை அரசன் வெட்டினான். அப்போது அந்தணர் இப்படிப்பட்ட காவல் உள்ள நாடு அல்லவா நாடு என்று சொல்ல வெட்டிய கையும் வளர்ந்தது.

(43) பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம்
அணியென்ப நாட்டிற் கிவ்வைந்து.

(பதவுரை) பிணியின்மை செல்வம்-நோய் இல்லாமை; பொருள், விளைவு, இன்பம், ஏமம் - விளைதல் சுகம், காவல் இவ்வைந்து - என்றும் உடைமையாகிய இவ்வைந்தும், நாட்டிற்கு - தேசத்திற்கு அணி என்பு - அழகு என்று சொல்லுவார்கள்.

(கருத்து) சிறந்து விளங்கும் நாடு இவ்வைந்தும் உடையதாய் இருக்கும்.

(கேள்வி) நாட்டிற்கு அழகு செய்வன எவை?

## நட்பு

சீதையை மீட்கச் சென்ற இராம இலட்சுமணர்களை யும் படை வீரர்களையும் இந்திரசித்து எதிர்த்துப் போர் செய்து முடியாமையால் எல்லோரையும் நாகபாசத்தை விட்டு மயங்கி மூர்ச்சையாய் விழும்படி செய்தான். இதை அறிந்த கருடன் நம் தலைவனுக்கும் வீரர்களுக்கும் ஆபத்து வந்தது என்று புறப்பட்டுவர, அக்கருடனைக் கண்ட வுடன் நாகபாசப் பிணிப்பு நீங்கி அனைவரும் தூங்கி விழித்தவர்போல எழுந்தார்கள். இவ்விதம் ஆபத்து வந்த காலத்தில் தக்க முறையில் வந்து உதவி செய்பவர்களே சிறந்த நட்பினர் ஆவார்கள்.

(44) உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

*(பதவுரை)* உடுக்கை இழந்தவன்-ஆடை அவிழ்ந்தவ னுக்கு, கைபோல்-அப்பொழுதே கைசென்று கட்ட உதவு தல் போல, இடுக்கண்-(நண்பனுக்கு வந்த) துன்பத்தை, ஆங்கு-(வந்த) அப்பொழுதே, களைவது-நீக்குவது, நட்பு ஆம்-நட்பாகும்.

*(கருத்து)* நண்பன் துன்பத்தை விரைவில் நீக்குவது நட்பாகும்.

*(கேள்வி)* நட்பு எப்படி இருத்தல் வேண்டும்?

## நட்பாராய்தல்

சோழநாட்டில் கோப்பெருஞ் சோழர் என்ற அரசர் ஒருவர் இருந்தார். அவர் தம் நாட்டில் வாழ்ந்த எவரையும் நட்பாகக்கொள்ளவில்லை. பாண்டிய நாட்டில் பிசிர் என்ற ஊரில் உள்ள ஆந்தை என்ற பெயருள்ளவரை நட்புக் கொண்டார். சோழ நாட்டாரை விட்டு வேற்று நாட்டில்

உள்ள பிசிராந்தையாரை நட்புக் கொள்ளக் காரணம் யாதென்றால் அவர், குணமும், குடிப்பிறப்பும், குற்றம் இல்லாமையும், நிறைந்த அறிவுள்ள உறவினரையுடைமையும் பேரறிவும் உள்ளதனால் ஆகும் என்று சோழன் தன்னைக் கேட்டவர்களுக்குக் கூறினான். இவ்விதமாக ஆராய்ந்து நட்புக்கொண்டால் அந்நட்பு மேன்மேல் வளரும்.

(45) குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
இனனு மறிந்தியாக்க நட்பு.

*(பதவுரை) குணனும்-(ஒருவன்) பண்பினையும், குடிமையும் - குடிப்பிறப்பையும், குற்றமும் - தவறையும், குன்றா இன்னும்-குறைவில்லாத சுற்றத்தையும், அறிந்து நட்புயாக்க-ஆராய்ந்து தெரிந்து நேசம் செய்க.*

*(கருத்து) ஒருவன் குணம் முதலியவற்றைத் தெரிந்தே சேரவேண்டும்.*

*(கேள்வி) எவைகளை ஆராய்ந்து நட்புக் கொள்ளல் வேண்டும்?*

## தீ நட்பு

வெவ்வேறு வழியாக யாத்திரை செல்லும் இரண்டு துறவிகள் ஓர் இடத்தில் சேர்ந்தனர். தனியே செல்வதை விட இருவரும் நட்பாய்ச் செல்லுதல் நல்லது என்று உறுதி கொண்டார்கள். ஒருவர் தம் கையில் உள்ள மூங்கில் துவாரத்தில் நிறைய பவுனை அடைத்து மேலே மூடி வைத்திருந்தார், மற்றவரிடம் எல்லா மூட்டையும் கொடுப்பார். இக்கழியைக் கொடுக்கமாட்டார். இதனால் சந்தேகம் கொண்ட மற்றவர், அடுத்த ஊர் போனவுடன், ஸ்வாமி! நேற்றுத்தங்கிய ஊர்ப் புல்லை என் தலையில் அறியாமல் எடுத்து வந்துவிட்டேன். இங்கே இருங்கள். அங்கே போட்டு வருகிறேன் என்று போட்டுவிட்டு வந்தார்.

இதனால் நம்பி தமது கைக்கழியை அவரிடம் கொடுத்துக் குளிக்கப் போனார். கழி கிடைத்தவுடன் மற்றவர் ஓட்டமாக ஓடிவிட்டார். குளித்துவந்து பார்க்க ஆள் இல்லை. செயல் வேறு சொல் வேறாகக் கூடிய நட்பு நமக்குக் கனவிலும் துன்பம் தரும்படி ஆனதே என்று அழுதார்.

## (46) கனவினு மின்னாது மன்னோ வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு.

(பதவுரை) வினைவேறு சொல் வேறுபட்டார்-செய்யும் தொழிலும் சொல்லும் பேச்சும் வேறு வேறாய் இருப்பவருடைய, தொடர்பு-நேசம், கனவினும் இன்னாது-நினைவிலே அன்றிக் கனவிலும் துன்பம் செய்யும்.

(கருத்து) வஞ்சகரோடு கூடுதல் ஆகாது.

(கேள்வி) 1. கனவிலும் இன்னாதது எது?

2. எவர் நட்பைக் கொள்ளுதல் ஆகாது?

## குடிமை

இரவில் ஒருவன் பிச்சை கேட்டான். வெளியே இருந்த செல்வர் தம் ஆளிடம் சொல்ல, அவன் பிச்சை போட்டான். அதை வாங்கிக் கொண்டு சென்றவன், இருட்டில் படி தெரியாமல் விழுந்து விட்டான். விழுந்தவன் எழுந்து பிச்சைக்குச் சென்றாலும் பக்கத்துக்கு இரண்டு தீவட்டி வேண்டும் என்றான். இதைக்கேட்ட செல்வர் இவன் பிச்சைக்காரன் அல்ல என்றழைத்துக் கேட்க, அரசன் மகன் என்று தெரிந்து தனக்குப் பிள்ளையில்லாமையால் அவனையே பிள்ளையாகக் கொண்டு தன் செல்வத்தையும் அவனுக்கே கொடுத்தார். இதனால் நிலத்தின் செழிப்பை முளை காட்டுவதைப்போல குலத்தின் சிறப்பை அவர் அவர் சொல்லே அறிவிக்கும்.

(47) நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.

(பதவுரை) நிலத்தில் கிடந்தமை - வயலின் செழிப்பைக், கால் காட்டும்-(அவ்வயலில் முளைத்த) முளை அறிவிக்கும், குலத்தில்-(அது போல) சாதியின் பெருமையை, பிறந்தார்-அக்குலத்தில் தோன்றியவர்கள், வாய்ச்சொல் காட்டும்-வாயில் இருந்து வரும் மொழி அறிவிக்கும்.

(கருத்து) நல்ல குடிப்பிறந்தார் இன் சொல்லே பேசுவர்.

(கேள்வி) நிலத்தியல்பையும் குலத்தியல்பையும் அறிவது எப்படி?

மானம

நீதி தவருத பாண்டியர்வம்சத்தில் தோன்றிய நெடுஞ்செழியன், திருடாத கோவலனைத் திருடினன் எனக் குற்றம் சாட்டிக் கொலை செய்தான். பின் உண்மை தெரிந்தான். நம்முன்னேர்கள் உயர்ந்த செங்கோலாக ஆண்ட அரசு, நம்மால் தாழ்ந்து விட்டது. இதை ஏனைய அரசரும் கேட்டால் தலையில் இருந்து விழுந்த மயிரைப்போல் அவமதிப்பார். அதனல் நம் உயிரையே விட்டுவிடுதல் நல்லது என்று நினைத்துத்தன் உயிரை விட்டு மானத்தைக் காப்பாற்றினன். இதனல் உயிரைவிட மானமே சிறந்தது.

(48) தலையி னிழிந்த மயிரனையர் ; மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை.

(பதவுரை) மாந்தர்-மக்கள், நிலையின் இழிந்தக் கடை-தம் உயர்ந்த நிலையை விட்டுத் தாழ்ந்த நிலையை அடைந்தபொழுது, தலையின் இழிந்தமயிர்-தலையை விட்டுக் கீழே விழுந்த மயிருக்கு, அனையர்-சமம் ஆவார்.

*(கருத்து) மக்கள் மேலும் மேலும் உயர்ந்த நிலையை அடைதல் வேண்டும்.*

*(கேள்வி) 1. தாழ்ந்த நிலையை அடைந்த மக்கள் எதற்கு ஒப்பாவர் ?*

## பெருமை

பாண்டவர்களும், கௌரவர்களும், குருகுலத்தில் பிறந்தவர்கள் ஆயினும், கௌரவர் பாண்டவர்களுக்கு ஒப்பாகார். திரௌபதியை மணம் செய்துகொள்ள அமைத்த அம்பு எய்யும் திறமையில் அர்ச்சுனன் வெற்றி பெற்றான். துரியோதனன் தோற்று வெட்கி வந்தான். இதனால் மக்கள் அனைவருக்கும் பிறப்பு சமமாய் இருத்தல் போல் அவர் அவர் செய்யும் தொழிலும் சமமாகும் என்று எண்ணுதல் கூடாது; மக்கள் செய்யும் தொழிலால் வேறுபடுவர்.

**(49) பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்குஞ் சிறப் பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.**

*(பதவுரை) எல்லா உயிர்க்கும் - எல்லா மக்கள் உயிர்க்கும், பிறப்பு ஒக்கும் - பொதுவாகிய பிறவி சமம் ஆனாலும், செய்தொழில் வேற்றுமையான் - அவை செய்யும் தொழில் வேறுபட்டால், சிறப்பு ஒவ்வா-பெருமை சிறுமை என்ற மேன்மைகள் சமம் ஆகா.*

*(கருத்து) மக்கள் பிறப்பால் சமமாயினும் செய்யும் நன்மை தீமையால் வேறுபடுவர்.*

*(கேள்வி) பிறப்பும் சிறப்பும் மக்களுயிர்க்கு அளிப்பன எவை ?*

## உழவு

மதுரையை ஆண்ட விசுவநாத நாயக்கர், நிலவரியைத் துன்புறுத்தி வாங்கியதற்காகத் தம் கீழ் வாழ்ந்த இரண்டு அதிகாரிகளை விலக்கிவிட்டனர். அவர்கள் வேறு வழி யின்மையால் பசியால் வாடி அலைந்தனர். அவர்கள் வருகையைக் கண்டு முன் அவர்களால் துன்புறுத்தப் பட்ட உழவர்கள் அவர்களை அழைத்துப்போய் அவர்கள் மனங் குளிரப் பேசி உண்ண அழைத்தனர். அப்போது அவர்கள், உழவர்களை வணங்கி, நீங்களே, உலகில் சிறந்த வாழ்க்கையையுடையவர்கள் நாங்கள் செய்த துன்பத்தையும் பொறுத்துக் கொண்டு எவரும் நீக்காத பசிப்பிணியை நீக்க அழைக்கும் நீங்களே தெய்வம் என்று புகழ்ந்து பின் உண்டார்கள். உழவர் சொற்படி அவர்களும் பிறகு உழவுத் தொழிலைச் செய்யத் தொடங்கினர்.

(50) உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்

*(பதவுரை) உழுது - உழவைச் செய்து, பயிரிட்டு உண்டு - (பிறரையும் உண்ணக் செய்து) தாமும் உண்டு வாழ்வாரே - வாழ்கின்றவரே, வாழ்வார் - மேலாக வாழ்கின்றவர் ஆவார், மற்று எல்லாம் - (உழவுத்தொழில் அல்லாத) பிறதொழில் செய்பவர் எல்லாரும், தொழுது - பிறரை வணங்கி, உண்டு - அதனால் வரும் பயனைத் தாம் உண்டு, பின் செல்பவர் - அவருக்குப்பின் சென்று ஏவல் செய்பவர் ஆவார்.*

*(கருத்து) உழுதுண்டு வாழும் வாழ்க்கையே சிறந்தது.*

*(கேள்வி) எது சிறந்த வாழ்க்கை யாகும்?*

# ஒற்றுமை நிலைய வெளியீடுகள்

எம். இ. வீரபாகு பிள்ளை, பி. ஏ. எல். டி.

| | | Rs. | nP |
|---|---|---|---|
| திருவாசகம் எளியவுரை | .. | 6 | 00 |
| திருக்குறள் எளியவுரை | .. | 1 | 50 |
| ,, அரும்பதவுரை | .... | 1 | 25 |
| பரமசிவன் பள்ளி வாழ்க்கை | .... | 3 | 00 |
| நமசிவாயம் | ... | 1 | 00 |
| அகத்தியர் தேவாரத் திரட்டு எளியவுரை | .... | 2 | 00 |
| புத்தர் வரலாறு | .... | 0 | 50 |
| அழியாப்புகழ்கொண்ட அறுபெரும் வணிகர்கள் | | 0 | 62 |
| விறலிவிடு தூது வசனம் | .... | 0 | 50 |
| பொது அறிவு அல்லது உனக்குத் தெரியுமா? (8 பகுதிகள்) | .... | 6 | 25 |
| தமிழ்-இங்கிலீஷ் ஹிந்தி மொழி பெயர்ப்பு அப்பியாசங்களில் தமிழ் இங்கிலீஷ் பகுதி. | | 1 | 00 |
| ஊரும் பேரும் (தமிழ்) | .... | 0 | 62 |
| ஆங்கிலக் கல்வி சாதித்ததென்ன? | ... | 0 | 50 |
| ராஜாராம் மோகன் ராய் | .... | 1 | 00 |
| மகா வீரர் | .... | 0 | 62 |
| கோபாலகிருஷ்ண கோக்ஹேல் | .... | 1 | 00 |
| மானிட நூல் (Anthropology) | .... | 0 | 62 |
| தமிழும் தமிழரும் (எம். இ. வீரபாகு பிள்ளை & ராமசாமிப் புலவர்) | .... | 3 | 00 |
| நீதி நெறிக்கதைகள் | .... | 0 | 31 |
| சிரிப்புக் கதைகள் Part I | .... | 1 | 00 |
| ஷை Part II | .... | 1 | 00 |
| ஷை இரண்டு பாகங்களும் சேர்ந்து பைண்டுடன் | | 2 | 25 |
| குதிரையின் கதை | .... | 0 | 40 |
| தேனீயின் கதை | .... | 0 | 37 |
| எறும்பின் கதை | .... | 0 | 31 |
| இந்தியத் தலைவர்கள் | ... | 0 | 37 |
| காக்கையின் கதை | .... | 0 | 50 |
| குட்டிக் கதைகள் | .... | 0 | 62 |
| சிறுவர் கதைகள் | .... | 0 | 62 |
| கிருஷ்ண சைதன்யர் வரலாறு | ... | 1 | 00 |
| வீரபாண்டியக் கட்டபொம்மன் | ... | 1 | 00 |
| கிளியின் கதை | .... | 0 | 50 |